SIVARAJAVEL IAS ACADEMY

AN IDEAL INSTITUTE FOR CIVIL SERVICE EXAMS

# சங்கமம்

போட்டித்தேர்வுகளுக்கான மாதாந்திர நடப்பு நிகழ்வுகள்

அக்டோபர்-2024 (தமிழ் / ஆங்கிலம்)




Padmashri, Khel Ratna | Arjuna awardee.

## RANI RAMPAL

Former Captain of Indian women's Hockey Team

அக்டோபர் 2024

# சங்கமம்

**இயக்குநர்:**
சிவராஜவேல் சி

**பதிப்பாசிரியர்**
அர்ச்சனா ச

**துணை பதிப்பாசிரியர்கள்**
வீர குமார்
மணிவண்ணன் சு
வெங்கடேசன் த

**வடிவமைப்பாளர்கள்**
தாமஸ் கலைவாணன் ச
கலைச் செல்வி ர

## ராணி ராம்பால்



ராணி ராம்பால் இந்திய மகளிர் ஹாக்கி அணியின் முன்னாள் கேப்டனும், விளையாட்டின் ஜாம்பவான் ஆவார்

ராணி ராம்பால் (பிறப்பு 4 டிசம்பர் 1994) ஒரு இந்திய பயிற்சியாளர் மற்றும் முன்னாள் பீல்ட் ஹாக்கி வீராங்கனை ஆவார். 15 வயதில், 2010 உலகக் கோப்பையின் தேசிய அணியில் இளையவர்.

முன்னோடியாக விளையாடினாள். ராம்பால் தனது வாழ்க்கையில் 212 சர்வதேச போட்டிகளில் விளையாடி 134 கோல்களை அடித்துள்ளார். அவர் ஒரு ஸ்ட்ரைக்கராகவும், மிட்-ஃபீல்டராகவும் இருமடங்காக செயல்பட்டார்.

**விருதுகள்**

- மேஜர் தியான் சந்த் கேல் ரத்னா (2020) - இந்தியாவின் உயரிய விளையாட்டு கௌரவம்.
- பத்மஸ்ரீ (2020) - நான்காவது மிக உயர்ந்த இந்திய தேசிய விருது

ஷஹாபாத்தின் தெருக்களில் இருந்து இந்திய பெண்கள் ஹாக்கியின் உச்சம் வரை, ராணியின் பயணம் மன உறுதியும் உறுதியும் கொண்டது. வெறும் 15 வயதில் அறிமுகமான அவர், 2010 ஆசிய விளையாட்டுப் போட்டிகள், 2017 ஆசியக் கோப்பை தங்கம் மற்றும் 2020 டோக்கியோ ஒலிம்பிக்கில் ஒரு வரலாற்று நிறைவு உட்பட மறக்க முடியாத வெற்றிகளுக்கு இந்தியாவை வழிநடத்தினார். அர்ஜுனா விருது மற்றும் பத்மஸ்ரீ உள்ளிட்ட அவரது சாதனைகள், விளையாட்டில் அவரது தாக்கத்தை எடுத்துக்காட்டுகின்றன. ராணி எண்ணற்ற இளம் பெண்களை பெரிய கனவு காண தூண்டியுள்ளார்.

**Visit us at**
:www.sivarajavelias.com
:https://t.me/dhentele

**தலைமை அலுவலகம்**
*சென்னை*
RBN டவர், No.AK - 2, 4வது அவென்யூ, 3வது மாடி,
சாந்தி காலனி, அண்ணா நகர்,
சென்னை - 600040. (பெட்ரோல் பங்க் அருகில்)
**தொலைபேசி:** 9626364444

**துணை அலுவலகங்கள்**
*திருநெல்வேலி*
எண்.106B, 3வது மாடி, ஜில்கல் காம்ப்ளக்ஸ்,
VOC மைதானம் எதிரில், பாளையங்கோட்டை – 627002.
**தொலைபேசி:** 9626252500

திருச்சி
எண்.143 ,4வது மாடி, லஷ்மி காம்ப்ளக்ஸ், சாலை ரோடு,
தில்லைநகர், திருச்சி – 620018.
**தொலைபேசி:** 9751500300

# பொருளடக்கம்

## 1 தமிழ்நாடு செய்திகள்


அன்றில் பறவைகள்.....7

பழங்கால மண்ஜாடிகள் கண்டெடுப்பு.....7

வானிலை முன்னறிவிப்புகளை அறிந்துகொள்ள புதிய செயலி:.....7

கலைச்செம்மல் விருது வழங்கும் திட்டம்.....7

எஸ்சி. எஸ்டி. மாநில ஆணைய தலைவர் நியமனம்:.....7

மு.மேத்தா, பி.சுசிலாவுக்கு 'கலைத்துறை வித்தகர் விருது' - முதல்வர் ஸ்டாலின் வழங்கினார்.....8

மகிழ் முற்றம் திட்டம்.....8

தமிழ்நாடு ராம்சார் தளங்கள்.....8

தமிழகத்தில் மகப்பேறு, குழந்தை இறப்பை பூஜ்ஜியத்துக்கு கொண்டுவர புதிய திட்டங்கள்.....8

முதல்வர் ஸ்டாலினுக்கு வாழ்நாள் சாதனையாளர் விருது:.....9

மக்களை தேடி மருத்துவம் திட்டத்துக்கு ஐநா விருது:.....9

6 மாவட்டங்களில் சூரியசக்தி மின்சார பூங்கா.....9

தேவிபட்டினம் அருகே பெருவயல் ரெணபலி முருகன் கோயிலில் மாறவர்மன் சுந்தரபாண்டியன் கல்வெட்டு கண்டெடுப்பு:.....9

114 ஆண்டுகள் பழமையான படித்துறைக் கல்வெட்டு.....9

இளஞ்சிவப்பு ஆட்டோக்கள் திட்டம்.....9

உலகத்தரம் வாய்ந்த வசதிகளுடன் நீலக்கொடி சான்றிதழ் பெற தயாராகும் மெரினா கடற்கரை.....10

தமிழகத்தில் கைம்பெண்களுக்காக சிறப்பு நலத்திட்டங்கள்:.....10

முதல்வரின் புத்தாய்வுத் திட்டத்துக்கு புதிய மாணவர்கள் விரைவில் தேர்வு (TNCMFP).....10

குறைவான காற்று மாசு: தமிழகத்தின் 3 நகரங்கள் சாதனை!.....11

வரைவு பட்டியல் வெளியீடு.....11

பாதம் பாதுகாப்போம் திட்டம் 11


## 2 தேசிய செய்திகள்


ஒரே நாடு ஒரே தேர்தல் திட்டம்:.....12

உள்ளாட்சி தேர்தல்களில் மத்திய தேர்தல் ஆணையம்:.....12

ரூ.2,000 நோட்டுகள் 98% திரும்பின:.....12

வெள்ளி கிரக ஆய்வுக்காக 2028-ல் வீனஸ் விண்கலம் ஏவப்படும்:.....12

மராத்தி, பாலி, பிராகிருதம், அசாமி, வங்க மொழிகளுக்கு செம்மொழி அந்தஸ்து:.....12

உத்தரகாண்ட் மாநிலம், 'தினசரி - நேர' மின் கட்டணத்தை அறிமுகப்படுத்தும் முதல் மாநிலமாக மாற உள்ளது:.....13

இந்திய கடற்பகுதியை கரியமில வாயு வெளியேற்றம் இல்லாத தளமாக மாற்றுவது குறித்த உயர்மட்ட மாநாடு:.....13

கஜிந்த் பயிற்சி - 2024.....13

பாரத்ஜென்:.....13

தேசிய விவசாயக் குறியீடு.....13

PM E-DRIVE.....13

இந்திய-ஓமன் கடற்படை 5 நாள் கடல்சார் பாதுகாப்பு கூட்டுப்பயிற்சி.....14

நிலவுக்கு மனிதர்களை அனுப்புவதற்கான முன்னோடி திட்டம்: சந்திரயான்-5 திட்டத்திற்கு அனுமதி:.....14

புதிய ஏவுகலன் மாதிரி.....15

இந்தியா – மாலத்தீவு உறவு.....15

ஸ்ரீஹரிகோட்டாவில் 3-வது ஏவுதளம்.....15

70வது தேசிய திரைப்பட விழா: ஏ.ஆர். ரகுமானுக்கு தேசிய விருது வழங்கிய ஜனாதிபதி:.....16

இந்திய அரசியலமைப்பின் ஐந்து மற்றும் ஆறாவது அட்டவணை.....16

டிராக்கோமா.....17

கட்காரி பழங்குடியினர்.....17

தேசிய மனித உரிமைகள் ஆணையத்தின் (NHRC) 31- வது நிறுவன தினம்.....17

TDP1.....17

பெருங்கற்கால தளம் – கர்நாடகா.....18

உயிரி பாலிமர்களுக்கான இந்தியாவின் முதலாவது செயல்விளக்க வசதி.....18

அமைச்சரவை முடிவுக்கு ஆளுநர் கட்டுப்பட்டவர் - சென்னை உயர்நீதிமன்றம்.....18

பெங்களூருவில் அக்டோபர் 22, 23-ம் தேதிகளில் இந்திய உயிர் சக்தி வேளாண் மாநாடு தொடக்கம்:.....18

இஸ்ரோ தலைவர் சோம்நாத்துக்கு உலக விண்வெளி விருது: சந்திரயான் 3 திட்ட பணிக.ளுக்காக அங்கீகாரம் ....19

இந்தியாவின் உதவியுடன் மாலத்தீவில் யுபிஐ பண பரிவர்த்தனை அறிமுகம்: ....19

சோசலிசம், மதச்சார்பின்மை இந்திய அரசியலமைப்பின் ஒருங்கிணைந்த பகுதிகள்: ....19

வயதை தீர்மானிக்கும் ஆவணம் இல்லை ஆதார்: உச்சநீதிமன்றம் ....19

புதிய இந்தியா எழுத்தறிவு திட்டம் ....20

சிங்கப்பூர் இந்தியா கடல்சார் இருதரப்பு பயிற்சி 2024 ....20

சமகம் நிகழ்ச்சி ....20

கிரேட் நிக்கோபார் தீவு 13வது பெரிய துறைமுக அந்தஸ்தைப் பெறுகிறது ....20

ASW SWC (GRSE) திட்டத்தின் ஏழாவது கப்பல் ‘அபய்’ துவக்கம் ....20

கர்தார்பூர் வழித்தட ஒப்பந்தம் புதுப்பிக்கப்பட்டது ....20

உலகளாவிய இயற்கை பாதுகாப்பு குறியீடு (NCI) 2024 ....21

ISRO-DBT ஒப்பந்தம் ....21

Bhu-Aadhaar ....21

21வது கால்நடை கணக்கெடுப்பு ....21

95% நிலப் பதிவுகள் டிஜிட்டல் மயமாக்கப்பட்டுள்ளன ....22

2024-ம் ஆண்டுக்கான இந்தியாவின் சிறந்த வங்கியாக எஸ்பிஐ தேர்வு ....22

இந்தியாவின் லட்சிய விண்வெளி பார்வை ....22

இந்தியாவில் வலுவூட்டு கடற்பாசி உற்பத்திக்கான வழிகாட்டுதல்கள் ....22

மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 0.7% Cyberfraud-ஆல் செலவாகும் ....23

வேகமான ரோந்து கப்பல்கள் ....23

நெல் வகை PR-126 ....23

தோட்டக்கலையின் ஒருங்கிணைந்த வளர்ச்சிக்கான பணி (MIDH) ....23

சட்டத்தின் ஆட்சிக் குறியீடு ....23

இந்திய பாதுகாப்பு ஏற்றுமதி ....24

## 3 சர்வதேச செய்திகள்

எஸ். ஜெய்சங்கர் அக்டோபர் 15, 16 ஆகிய தேதிகளில் ஷாங்காய் உச்சி மாநாட்டிற்காக பாகிஸ்தானுக்கு செல்கிறார்: ....25

அமெரிக்காவை தாக்கிய ஹெலீன் புயல் ....25

நோபல் பரிசு: ....25

ஆஸ்திரேலியா, ஜப்பான், அமெரிக்கா ஆகிய நாடுகளுடன் மலபார் 2024 ....26

ஆசியாவின் மிகப்பெரிய, உலகின் மிக உயரமான இமேஜிங் செரென்கோவ் ஆய்வகம் ....26

பிரிக்ஸ் உறுப்பினர் உரிமைக்கு 34 நாடுகள் அதிகாரப்பூர்வமாக விண்ணப்பித்துள்ளன. ....26

காட்டுத் தீயில் இருந்து கார்பன் டை ஆக்சைடு வெளியேற்றம் ....27

உலகின் சிறந்த பள்ளிகள் பட்டியல் ....27

நிகழாண்டுக்கன சிறந்த தரவரிசைப் பட்டியல் ....27

15வது உமிழ்வு இடைவெளி (EGR) அறிக்கை 2024 ....27

சமத்துவமின்மை குறியீட்டைக் குறைப்பதற்கான உறுதிப்பாடு 2024 ....28

நியூட்ரினோவை ஆய்வு செய்ய சீனாவின் ஜூனோ சோதனை ....28

விஞ்ஞானிகள் மூன்று அமைப்பு கருந்துளை கண்டுபிடிப்பு ....28

## 4 திட்டங்கள்

தொலைநிலை உணர்திறன் அமைப்பு LiDAR ....29

உயிரியல் பன்முகத்தன்மை மாநாட்டின் COP-16 ....29

ஆயுஷ்மான் பாரத் திட்டம்: ....30

வேளாண் திட்டங்கள்: ....30

ஜல் ஹி அம்ரித்: ....30

அடல் பென்ஷன் யோஜனா ....31

நி-க்ஷய் போஷன் யோஜனா ....31

உமாங் - டிஜி லாக்கர் ....31

வளர்ச்சியடைந்த பாரதம் இலக்கை அடைய உதவும் ‘உத்வேகம்’ திட்டம்: பிரதமர் ....31

பிரதமரின் பயிர்க் காப்பீட்டுத் திட்டம் ....31

பிரதமரின் பயிர்க் காப்பீட்டுத் திட்டம் ....32

EShram- ஒன் ஸ்டாப் தீர்வு ....32

8 வருட பிராந்திய இணைப்புத் திட்டம் ....32

பிரதான் மந்திரி பாரதிய ஜனௌஷதி பரியோஜனா(PMBJP) ....32

‘முத்ரா’ கடன் வரம்பு ரூ.20 லட்சமாக உயர்வு: ....33

இந்திய விண்வெளி ஸ்டார்ட் அப்களை ஊக்குவிக்க ரூ.1,000 கோடி நிதிக்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் ....33

இந்திய ரயில்வேக்கான அம்ரித் பாரத் நிலைய திட்டம் ....33

கால்நடை பெருந்தொற்றுநோய் தடுப்பு நிதிய திட்டம் ....33

பிரதான் மந்திரி வன்பந்து கல்யாண் யோஜனா (PMVKY) 34

# 5 விளையாட்டுச் செய்திகள்


ஜப்பானில் 5000 மீட்டர் ஓட்டத்தில் இந்தியாவின் குல்வீர் சிங் தேசிய சாதனையை முறியடித்தார் ....35

வெள்ளிப் பதக்கம் வென்றார் தீபிகா குமாரி : ....35

ஹாக்கி: ஓய்வுபெற்றார் ராணி ராம்பால் ....35

வரலாற்று சாதனையை நிகழ்த்தினார் இந்தியாவின் அர்ஜுன் எரிகைசி..! ....35

ஜப்பான் ஓபன்: ஜெங் கின்வென் சாம்பியன் ....35

வியன்னா ஓபன்: ஜேக் டிரேப்பருக்கு கோப்பை ....35

சர்வதேச ஒலிம்பிக் கமிட்டியிடம் 2036-ம் ஆண்டு ஒலிம்பிக்கை நடத்த விருப்பம் தெரிவித்து கடிதம் வழங்கியது இந்தியா ....36


# 6 முக்கிய தினங்கள்


வன உயிரின வார விழா: ....37

தேசிய தன்னார்வ இரத்ததான தினம்: ....37

சர்வதேச முதியோர் தினம்: ....37

அன்னிபெசண்ட் அம்மையார் பிறந்த நாள்: ....37

உலக மார்பக புற்றுநோய் விழிப்புணர்வு மாதம்: ....37

சர்வதேச அகிம்சை தினம் ....38

கர்ம வீரர் காமராஜரின் நினைவு நாள் ....38

உலக புன்னகை தினம் -- அக்டோபர் 4 ....38

உலக விலங்குகள் தினம்: ....39

உலக விண்வெளி வாரம் ....39

உலக ஆசிரியர் தினம்: ....39

இராமலிங்க அடிகளார் ....39

விமானப்படை தினம்: ....39

உலக பருத்தி தினம் ....40

தமிழகத்தில் முதன்முதலாக நீலகிரி வரையாடுகள் தினம்: ....40

உலக அஞ்சல் தினம் ....40

உலக மனநல தினம் ....40

உலக பார்வை தினம் 2024 ....41

சர்வதேச பெண் குழந்தை தினம் 2024 ....41

சங்கரலிங்கனாரின் நினைவு தினம் ....41

சர்வதேச பேரிடர் அபாய குறைப்பு தினம் ....41

உலக தர நிர்ணய தினம் ....42

அப்துல் கலாம் 93-வது பிறந்த தினம் ....42

உலக உணவு தினம் - அக்டோபர் 16 ....42

சுதந்திர போராட்ட வீரர் வீரபாண்டிய கட்டபொம்மன் ....42

தேசிய பாதுகாப்புப் படை உதயமான தினம்: ....43

தேசிய கற்றல் வாரம்: தொடங்கிவைத்தார் பிரதமர் ....43

இந்திய காவல்துறை நினைவு தினம் 2024 ....43

மோல் தினம் : அக்டோபர் 23 ....43

அக்டோபர் 28 முதல் ஊழல் தடுப்பு விழிப்புணர்வு: ....43

உலக போலியோ தினம்: அக்டோபர் 24 ....43

ஐக்கிய நாடுகள் தினம் : ....44

சர்வதேச கலைஞர்கள் தினம் ....44

அக்டோபர் 27 - ஜதீந்திரநாத் தாஸ் பிறந்த தினம் ....44

இந்திய ராணுவத்தின் காலாட்படை தினம் அக்டோபர் 27 ....44

ஒலி ஒளிப் பாரம்பரியத்திற்கான உலக தினம் ....44

சர்வதேச அனிமேஷன் தினம் - அக்டோபர் 28 ....45

NDMA உருவான நாள் - அக்டோபர் 28 ....45

உலக சிக்கன நாள் ....45

இந்திய அணுசக்தி துறையின் தந்தை 'ஹோமி பாபா' பிறந்த தினம் - அக்டோபர் 30 ....45


# 7 நியமனங்கள்


INS இன் புதிய தலைவராக ஷ்ரேயாம்ஸ் குமார் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டார்: ....46

ராணுவ மருத்துவப் பிரிவில் முதல் பெண் இயக்குநர் பொறுப்பேற்பு : ....46




## அன்றில் பறவைகள்

- டெல்டா மாவட்டங்களில் நீர் நிலைகள் அதிகம் உள்ளதால் தஞ்சாவூர் மாவட்டத்தில் உள்ள நீர் நிலைகளைத் தேடி வடமாநிலங்களில் இருந்து அன்றில் பறவைகள் கூட்டம் கூட்டமாக வலசை வந்துள்ளன.
- கருப்பு நிறம் கொண்டவை அன்றில் பறவைகள்
- சுமார் 3 கிலோ எடை வரை உள்ள இந்த பறவைகள் கருப்பு நிறத்துடன் நீளமான மூக்குடன் இருக்கும்.
- பறவைகள் ஒரு இடத்திலிருந்து மற்றொரு இடத்திற்கு இடம்பெயர்தல் வலசை போதல் எனப்படும்.
- தமிழ்நாட்டில் வடகிழக்கு பருவ மழைக்காலம் அக்டோபர் முதல் டிசம்பர் வரை ஆகும்.
- அன்றில் பறவைகள் செப்டம்பர் முதல் பிப்ரவரி வரை தமிழ்நாட்டில் இருக்கும்.

## பழங்கால மண்ஜாடிகள் கண்டெடுப்பு

- தருமபுரி மாவட்டம், மாரண்டஅள்ளி அருகே தொல்பழங்கால மண்ஜாடிகள் கண்டெடுக்கப்பட்டன.
- இந்த மண் ஜாடி 3,500 ஆண்டுகளுக்கு முந்தையவையாகஇருக்கலாம். தருமபுரி மாவட்டத்தில் பங்குநத்தம், பெரும்பாலை ஆகிய பகுதிகளில் மேற்கொள்ளப்பட்டு வரும் அகழாய்வுகளிலும், 3000 ஆண்டுகளுக்கு முன்பிருந்தே இங்கு மனிதர்கள் வாழ்ந்து வந்திருப்பதற்கான சான்றுகள் கண்டறியப்பட்டுள்ளன.
- தமிழ்நாடு மாநில தொல்லியல் துறையானது கீழடியில் பத்தாம் கட்ட அகழாய்வு உட்பட தமிழகம் முழுவதும் எட்டு இடங்களில் அகழாய்வுப் பணிகளைத் தொடங்கியுள்ளது.

## வானிலை முன்னறிவிப்புகளை அறிந்துகொள்ள புதிய செயலி:

- வானிலை முன்னெச்சரிக்கை உள்ளிட்ட முன்னறிவிப்புகளை அறிந்துகொள்ள தமிழ்நாடு அரசு TN ALERT என்ற செயலி தொடங்கப்படவுள்ளது.
- மழையின் அளவு, ஏரிகளில் நீர் இருப்பு நிலவரத்தை இந்த செயலி மூலம் மக்கள் அறிய முடியும்.
- இந்த செயலியில் பொதுமக்கள் தங்கள் செல்போன் எண்ணை பதிவேற்றம் செய்துவிட்டால் அவரவர் வசிக்கும் பகுதியின் வானிலை நிலவரம் குறித்த, குறுந்தகவலும் அனுப்பப்படும்.

## கலைச்செம்மல் விருது வழங்கும் திட்டம்

- மரபுவழி, நவீனபாணி கலைப்பிரிவுகளில் சிறந்த சாதனைகள் புரிந்த ஓவிய, சிற்பக் கலைஞர்களை ஊக்குவிக்கும் வகையில், கலைச்செம்மல் விருதுகள் தமிழக அரசால் வழங்கப்படுகின்றன.
- கலைச்செம்மல் விருது பெறும் கலைஞர்களுக்கு செப்புப்பட்டயம் மற்றும் விருதுத் தொகையாக ரூ.1,00,000/- வழங்கப்பட்டு வருகிறது.
- தமிழக அரசின் கலை பண்பாட்டு துறை சார்பில், தமிழகத்தை சேர்ந்த மரபு வழி கலை, நவீன பாணி கலை, நுண்கலை துறையில் சாதனை செய்துள்ள கலைஞர்களை பாராட்டி, 'கலைச்செம்மல் விருது' வழங்கப்படுகிறது.
- 2024 - 25ம் ஆண்டு கலைச்செம்மல் விருதாளர்கள்:
- மரபு வழி ஓவியப் பிரிவு - ஓவியர் மணிவேலு,
- மரபு வழி சிற்பப் பிரிவு - பாலசந்தர், கன்னியப்பன்;
- நவீன பாணி ஓவியப் பிரிவு - முரளிதரன், செல்வராஜ்;
- நவீன பாணி சிற்பப் பிரிவு - ராகவன்

## எஸ்சி. எஸ்டி. மாநில ஆணைய தலைவர் நியமனம்:

- தமிழ்நாடு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்கான மாநில ஆணையத்தின் தலைவராக ஓய்வு பெற்ற நீதிபதி எஸ்.தமிழ்வாணன் நியமிக்கப்பட்டுள்ளார்.
- அவர் 3 ஆண்டுகளுக்கு தலைவராகச் செயல்படுவார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

- பட்டியல் சாதிகள் மற்றும் பழங்குடியினருக்கான தமிழ்நாடு மாநில ஆணையம் 2021 இல் நிறுவப்பட்டது

## மு.மேத்தா, பி.சுசிலாவுக்கு 'கலைத்துறை வித்தகர் விருது' - முதல்வர் ஸ்டாலின் வழங்கினார்

- தமிழ்த் திரையுலகில் சிறந்து விளங்கிடும் வாழ்நாள் சாதனையாளர்களைப் போற்றிப் பாராட்டிடும் வகையில் தமிழக அரசின் சார்பில் 2023-ம் ஆண்டுக்கான கலைஞர் நினைவு கலைத்துறை வித்தகர் விருதுகளை கவிஞர் மு. மேத்தா-வுக்கும், பின்னணிப் பாடகி பி. சுசிலாவுக்கும் வழங்கி சிறப்பித்தார்.
- தமிழக அரசின் சார்பில், மறைந்த முதல்வர் கருணாநிதியின் பெயரில் கலைஞர் நினைவு கலைத்துறை வித்தகர் விருது ஒவ்வொரு ஆண்டும் கருணாநிதியின் பிறந்த நாளான ஜூன் 3-ஆம் நாளான்று வழங்கப்படும் என்றும், தேர்ந்தெடுக்கப்படும் விருதாளர்களுக்கு 10 லட்சம் ரூபாயும், நினைவுப் பரிசும் வழங்கப்படும் என்றும் அறிவித்துள்ளது.

## மகிழ் முற்றம் திட்டம்

- அரசுப் பள்ளிகளில் பயிலும் மாணவர்களிடம் தலைமைப் பண்பை வளர்க்கும் விதமாக ரூ.2 கோடியில் 'மகிழ் முற்றம்' என்ற திட்டத்தின் கீழ் மாணவர் குழுக்கள் உருவாக்கப்பட உள்ளனர்.
- ஒவ்வொரு குழுவுக்கான மாணவர் தலைவர்கள், வகுப்பு தலைவர்கள், தலைமை பொறுப்பு ஆசிரியர், குழுவுக்கான பொறுப்பு ஆசிரியர்கள் ஆகியோருக்கான பதவி ஏற்பு விழா அனைத்து பள்ளிகளிலும் நவம்பர் 14-ஆம் தேதி நடைபெறுவதை தலைமை ஆசிரியர்கள் உறுதி செய்ய வேண்டும்.
- மாணவர்களிடையே தலைமைப் பண்பை வளர்க்கும் வகையில் குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை எனும் பெயர்களில் குழுக்கள் அமைத்து மாணவ தலைவர் மற்றும் மாணவ அமைச்சர்கள் தேர்வு செய்யப்படுவர். இதன்மூலம் மாணவர்களிடையே அரசியல் அறிவு சார்ந்த அனுபவங்கள், ஆளுமைத் திறன் மேம்பட மாதிரி சட்டப்பேரவை, நாடாளுமன்றம் நடத்தப்படும்.

**நோக்கம்**:

- குழுவாக இணைந்து செயல்படுதல்,
- சமூக மனப்பான்மை,
- வேற்றுமைகள் இல்லாத பரஸ்பர ஆதரவு

## தமிழ்நாடு ராம்சார் தளங்கள்

- ராமநாதபுரத்தில் உள்ள இரண்டு பறவைகள் சரணாலயங்களுக்கு ராம்சார் அந்தஸ்து பெற தமிழ்நாடு அரசு முயற்சி.
- திருப்பூர் மாவட்டம் நஞ்சராயன் பறவைகள் காப்பகம் மற்றும் விழுப்புரம் மாவட்டம் கழுவேலி பறவைகள் காப்பகம் ஆகியவற்றுடன் சேர்த்து தமிழ்நாட்டில் உள்ள ராம்சார் தளங்களின் எண்ணிக்கை 18 ஆக உயர்ந்துள்ளது.
- இதன் மூலம், இந்தியா தனது ராம்சார் தளங்களின் (சர்வதேச முக்கியத்துவம் வாய்ந்த ஈரநிலங்கள் எண்ணிக்கையை தற்போதுள்ள 82-லிருந்து 85 ஆக உயர்த்தியுள்ளது.
- உலக ஈரநில தினம் பிப்ரவரி 2-ம் தேதி கடைப்பிடிக்கப்படுகிறது.
- சர்வதேச முக்கியத்துவம் வாய்ந்த ஈரநிலங்கள் ராம்சார் தளங்கள் என்று அழைக்கப்படுகின்றன.
- 1971-ம் ஆண்டு ஈரானில் உள்ள ராம்சார் நகரில் கையெழுத்திடப்பட்ட ராம்சார் உடன்படிக்கையின் ஒப்பந்த தரப்பு நாடுகளில் இந்தியாவும் ஒன்றாகும்.
- 1971-ம் ஆண்டு பிப்ரவரி 2-ம் தேதி ஈரநிலங்கள் குறித்த இந்த சர்வதேச ஒப்பந்தத்தை ஏற்றுக்கொண்டதை நினைவுகூரும் வகையில் இந்த தினம் சர்வதேச ஈரநில தினமாக உலகம் முழுவதும் கொண்டாடப்படுகிறது.
- ஆகஸ்ட் 2022-ல், சுதந்திரத்தின் 75-வது ஆண்டில் மொத்த ராம்சார் தளங்களின் எண்ணிக்கையை 75-ஆக உயர்த்துவதில் இந்தியா ஒரு குறிப்பிடத்தக்க மைல்கல்லை எட்டியுள்ளது.

## தமிழகத்தில் மகப்பேறு, குழந்தை இறப்பை பூஜ்ஜியத்துக்கு கொண்டுவர புதிய திட்டங்கள்

- தமிழகத்தில் மகப்பேறு, குழந்தை இறப்பை பூஜ்ஜியத்துக்கு கொண்டு வருவதற்காக 4 புதிய திட்டங்கள் தொடங்கப்பட்டுள்ளன என்று சுகாதாரத் துறை அமைச்சர் தெரிவித்தார்.
- தமிழகத்தில் பிறந்த அனைத்து குழந்தைகளுக்கும் பிறவி குறைபாடுகளைக் கண்டறிய 1,000 அரசு மருத்துவமனைகளில் பரிசோதனைகள் மேற்கொள்ளப்படவுள்ளன.
- பச்சிளங் குழந்தைகளின் வளர்ச்சி மற்றும் நலனை கண்காணிக்க சிறப்பு மையங்கள் 400 இடங்களில் தொடங்கப்படுள்ளன.
- குறைப்பிரசவம் மற்றும் எடை குறைவான பச்சிளம் குழந்தைகளை தொடர்ந்து அவர்களது இல்லங்களிலேயே தொழில்நுட்ப உதவியோடு கண்காணிப்பதற்கான முன்னோடித் திட்டம் சென்னை, செங்கல்பட்டு, கடலூர்,

கள்ளக்குறிச்சி, காஞ்சிபுரம், திருவண்ணாமலை மற்றும் விழுப்புரம் ஆகிய ஏழு மாவட்டங்களில் தொடங்கி வைக்கப்பட்டுள்ளன.

- ஆரம்பகால குழந்தை வளர்ச்சிக்கான 'பெற்றோர் பயன்பாட்டு செயலி' தொடங்கி வைக்கப்பட்டுள்ளது.
- தமிழகத்தில் கடந்த 3 ஆண்டுகளில் பல்வேறு குழந்தைநலத் திட்டங்களை செயல்படுத்தியதன் மூலம் 1,000 பிறப்புகளுக்கு 10.2 ஆக இருந்த குழந்தை இறப்பு விகிதம் 8 ஆக குறைந்துள்ளதாக சுகாதார மேலாண்மை தகவல் அமைப்பு தெரிவித்துள்ளது. மகப்பேறு மரணம் 1 லட்சம் மகப்பேறுக்கு தமிழகம் 40.2 ஆக உள்ளது.

## முதல்வர் ஸ்டாலினுக்கு வாழ்நாள் சாதனையாளர் விருது:

- மனிதவள மேலாண்மையில் சிறப்பாக செயல்பட்டதற்காக முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கு ஆசிய மனிதவள மேலாண்மைக் கழகம் சார்பில் வாழ்நாள் சாதனையாளர் விருது வழங்கப்பட்டுள்ளது..
- தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகம் மூலம் பல லட்சம் பேருக்கு திறன் பயிற்சி அளித்துள்ளனர்.
- வேலைவாய்ப்புகள் அதிகரிக்கப்பட்டுள்ளன. இளைஞர்கள் வாழ்க்கைத் தரம் உயர்ந்துள்ளது.
- கல்வி, மனிதவள மேம்பாடுதான் வறுமையை ஒழிக்கும் என்பதில் இக்குழு நம்பிக்கையை கொண்டுள்ளது. இதற்காக முதல்வருக்கு இந்த விருது வழங்கப்பட்டுள்ளது.

## மக்களை தேடி மருத்துவம் திட்டத்துக்கு ஐநா விருது:

- தொற்றா நோய்களை கட்டுப்படுத்துவதில் முதன்மையான மற்றும் சிறப்பான திட்டங்களை தீட்டி செயல்படுத்துவதற்காக, ஐநா அமைப்பின் 2024 ஆண்டுக்கான United Nation Interagency Task Force Award தமிழக சுகாதாரத்துறைக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.
- இந்த விருதானது, தமிழக அரசின் சுகாதாரத்துறைக்கு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறைக்கு உலக நாடுகள் அளவில் "மக்களை தேடி மருத்துவம்" திட்டத்தினை செயல்படுத்தியதற்காக அமெரிக்காவில் உள்ள நியூயார்க்கில் நடந்த 79-வது ஐக்கிய நாடுகள் பொது சபையில் அறிவிக்கப்பட்டுள்ளது.

## 6 மாவட்டங்களில் சூரியசக்தி மின்சார பூங்கா

- சூரியசக்தி மின்சார பூங்கா அமைக்க கடந்த 2021-22-ல் மின்வாரியம் திட்டமிட்டது.
- இதன்படி திருவாரூர், கரூர், நாகை, சேலம், செங்கல்பட்டு, காஞ்சிபுரம் ஆகிய மாவட்டங்களில் 3,300 ஏக்கர் நிலம் தேர்வு செய்யப்பட்டது.
- முதல் பூங்காவாக திருவாரூரில் 50 மெகாவாட் திறனில் சூரியசக்தி மின்சார நிலையம் அமைக்க திட்டமிடப்பட்டது.
- இப்பணிகளை மேற்கொள்ள தமிழக பசுமை எரிசக்தி கழகம் என்ற புதிய நிறுவனம் இந்த ஆண்டு ஆரம்பத்தில் தொடங்கப்பட்டது

## தேவிபட்டினம் அருகே பெருவயல் ரெணபலி முருகன் கோயிலில் மாறவர்மன் சுந்தரபாண்டியன் கல்வெட்டு கண்டெடுப்பு:

- தேவிபட்டினம் அருகே பெருவயல் ரெணபலி முருகன் கோயிலில் 800 ஆண்டுகள் பழமையான பாண்டியமன்னர் கல்வெட்டை ராமநாதபுரம் தொல்லியல் ஆய்வு நிறுவனத்தின் தலைவர் வே.ராஜகுரு கண்டெடுத்து படியெடுத்து ஆய்வு செய்தார்.
- இந்த கல்வெட்டு 800 ஆண்டுகள் பழமையான முதலாம் மாறவர்மன் சுந்தரபாண்டியன் (கி.பி.1216-1244)காலத்தைச் சேர்ந்ததாகும்.

## 114 ஆண்டுகள் பழமையான படித்துறைக் கல்வெட்டு

- தென்காசி மாவட்டம் அனுமன் நதியில், 114 ஆண்டுகள் பழமையான படித்துறைக் கல்வெட்டு கண்டறியப்பட்டுள்ளது.
- இந்தக் கல்வெட்டு ஸ்ரீ என்ற எழுத்துடன் தொடங்குகிறது. மொத்தம் 8 வரிகளில் கல்வெட்டு பொறிக்கப்பட்டுள்ளது.
- கொல்லம் ஆண்டு 1086 ஆவணி 1 ஆம் தேதி (17/08/1910) மலையாளப் புத்தாண்டு தொடங்கும் நாளில் பொறிக்கப்பட்டுள்ளது.
- சங்கரலிங்கய்யர் பேரனும் சாமுவய்யர் மகனுமான ராமய்யர் என்பவர் இந்தப் படித்துறையைக் கட்டியதாக கல்வெட்டு குறிப்பிடுகிறது.
- மிகுந்த எழுத்துப் பிழைகளுடன் தமிழிலும் கிரந்தத்திலும் பொறிக்கப்பட்டுள்ளது.
- கல்வெட்டின் இறுதியில் 'தர்மோ ரக்ஷகக் கபிம்' என்று கிரந்த எழுத்தில் சம்ஸ்கிருத மொழியில் எழுதப்பட்டுள்ளது. இதன் பொருள் இந்த தர்மத்தை அனுமன் காப்பார் என்பதாகும்.

## இளஞ்சிவப்பு ஆட்டோக்கள் திட்டம்

- தமிழகத்தில் பெண்களின்பாதுகாப்பை மேலும் வலுப்படுத்தும் நோக்கத்துடன் புதிய

முன்னெடுப்பாக 'இளஞ்சிவப்பு ஆட்டோக்களை' தமிழக அரசு அறிமுகப்படுத்தவுள்ளது.

- இத்திட்டத்தின் கீழ் பெண் ஓட்டுநர்கள் மூலம் 250 ஆட்டோக்கள் சென்னையில் இயக்கப்பட உள்ளன.
- இந்த திட்டத்தில் பயன்பெற பெண்கள் மட்டுமே விண்ணப்பிக்கலாம். அதேபோல விண்ணப்பிக்கும் பெண்கள் 25 வயது முதல் 45 வயதுக்கு மிகாமல் இருக்க வேண்டும்.
- 10-ம் வகுப்பு தேர்ச்சி, ஓட்டுநர் உரிமம் தேவை. குறிப்பாக சென்னையில் குடியிருப்பவராக இருக்க வேண்டும்.

## உலகத்தரம் வாய்ந்த வசதிகளுடன் நீலக்கொடி சான்றிதழ் பெற தயாராகும் மெரினா கடற்கரை

- சென்னையின் முக்கிய அடையாளங்களில் ஒன்றான மெரினா கடற்கரை, புகழ்பெற்ற நீலக் கொடி சான்றிதழை பெற தகுதிகளை எட்டியுள்ளது.
- அதை செயல்படுத்தும் வகையில், இப்பணிகளை செய்ய மாநகராட்சி டெண்டர் வெளியிட்டுள்ளது.
- சென்னை மெரினா கடற்ரை இந்தியாவின் மிக நீண்ட மற்றும் உலகின் 2வது நீள கடற்கரை. வடக்கில் புனித ஜார்ஜ் கோட்டை, தெற்கில் பெசன்ட் நகர் வரை சுமார் 12 கி.மீ. வரை உள்ளது.
- 1880ம் ஆண்டுகளில் ஆளுநர் மவுண்ட் ஸ்டூவர்ட் எல்பின்ஸ்டோன் என்பவரால் இந்த கடற்கரை முதன்முறையாக புதுப்பிக்கப்பட்டது.
- நிதிநிலை அறிக்கை 2021-22ம் ஆண்டு வெளியிடப்பட்ட அறிவிப்பின்படி, கடற்கரைகளின் தரம், பாதுகாப்பு, தகவல் மற்றும் பாதுகாப்புச் சேவையை உயர்த்த, மாசுபாட்டை குறைக்க அடுத்த 5 ஆண்டுகளில் 10 கடற்கரைகளுக்கு சர்வதேச நீலக்கொடி தரச் சான்றிதழ் பெறுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என தமிழ்நாடு அரசு தெரிவித்துள்ளது.
- சிறந்த, சுற்றுச்சூழல் மிக்க, கடல்சார் சூழலியைப் பேணிக் காக்கும் அழகிய கடற்கரைகளை தேர்வு செய்து டென்மார்க்கை சேர்ந்த சுற்றுச்சூழல் கல்வி அறக்கட்டளை சார்பில் இந்தச் சான்றிதழ் வழங்கப்படுகிறது.
- இந்த சான்றிதழ் சுற்றுச்சூழல் மேலாண்மை, நீரின் தரம், நீல நிறம், பாதுகாப்பு, குளிக்க தகுந்த சுகாதாரமான நீர் உள்ளிட்ட 33 அம்சங்களை கொண்டு வழங்கி வருகிறது

## தமிழகத்தில் கைம்பெண்களுக்காக சிறப்பு நலத்திட்டங்கள்:

- தமிழகத்தில் கைம்பெண்களுக்காக பல்வேறு நலத்திட்டங்களை உருவாக்கி சிறப்பாக நடைமுறைப்படுத்துவதுடன், தேவையான நிதியையும் முதல்வர் ஒதுக்கி வருவதாக தமிழக அரசு தெரிவித்துள்ளது.
- சிறப்பு நலத்திட்டங்கள்:
- சமூக பாதுகாப்பு திட்டங்களின் கீழ் உயர்த்தப்பட்ட மாத ஓய்வூதியம் ரூ.1,200-ஐ கைம்பெண்கள் பெற்று வருகின்றனர்.
- திருமணமாகாத பெண்கள், கைம்பெண்கள், திருநங்கைகளுக்கு மாதம் ரூ.1,000 கலைஞர் மகளிர் உரிமைத் தொகை தரப்படுகிறது.
- அங்கன்வாடி, சத்துணவுத்திட்ட பணியிடங்களில் கைம்பெண்களுக்கு 25 சதவீதம், அரசு தேர்வாணையம் மூலம் நிரப்பப்படும் பணியிடங்களில் 3 சதவீதம் உள் ஒதுக்கீடு வழங்கப்படுகிறது.
- சமூக நலத்துறையின் திருமண நிதியுதவி திட்டத்தின் கீழ், கடந்த 3 ஆண்டுகளில் 91 கைம்பெண்கள் மறுமணம் செய்து உதவித்தொகை பெற்றுள்ளனர்.
- சத்தியவாணி முத்து அம்மையார் நினைவு இலவச தையல் இயந்திரம் திட்டத்தில் 7,316 பெண்கள் பயன்பெற்றுள்ளனர்.
- கைம்பெண்கள், கணவனால் கைவிடப்பட்ட பெண்கள், நலிவுற்ற பெண்கள், ஆதரவற்ற பெண்கள் உள்ளிட்டோருக்காக அரசு சார்பில் நலவாரியம் உருவாக்கப்பட்டுள்ளது.
- கைம்பெண்களின் வாழ்வாதாரத்தை உயர்த்த, சென்னையில் இளஞ்சிவப்பு ஆட்டோக்கள் இயக்கப்பட உள்ளன.
- சுயதொழில் தொடங்க 200 கைம்பெண்கள் மற்றும் ஆதரவற்ற மகளிருக்கு தலா ரூ.50 ஆயிரம் அரசு மானியம் வழங்க உள்ளது.
- 6 அரசு சேவை இல்லங்கள், மருத்துவ, உளவியல் உதவி அளிக்க 48 ஒருங்கிணைந்த சேவைமையங்கள் செயல்படுகின்றன.
- குடும்ப வன்முறையால், பாதிக்கப்பட்ட பெண்களுக்கு 36 மகளிர் தங்கும் இல்லங்கள் செயல்பட்டு வருகின்றன.
- இவ்வாறு பல்வேறு சேவைகளை கைம்பெண்கள் மற்றும் ஆதரவற்ற பெண்கள் பயன்பெறும் வகையில் தமிழக அரசு சிறப்பாக வழங்கி வருகிறது.

## முதல்வரின் புத்தாய்வுத் திட்டத்துக்கு புதிய மாணவர்கள் விரைவில் தேர்வு (TNCMFP)

- முதல்வரின் புத்தாய்வுத் திட்டத்துக்கு புதிய மாணவர்கள் விரைவில் தேர்வு செய்யப்பட

இருப்பதாக துணை முதல்வர் தெரிவித்தார்.

- முதல்வரின் புத்தாய்வுத் திட்டம் கடந்த 2022-ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது.
- நோக்கம்: திறன்மிகு இளைஞர்களின் ஆற்றல், திறமையை பயன்படுத்தி நிர்வாக செயல்முறைகளின் செயல்திறனை மேம்படுத்துவது.
- இத்திட்டத்தின்கீழ் தேர்வு செய்யப்பட்டவர்களுக்கான பயிற்சி திருச்சி பாரதிதாசன் மேலாண்மை கல்வி நிறுவனத்துடன் ஒருங்கிணைந்து சென்னை அண்ணா நிர்வாக பணியாளர் கல்லூரியில் வழங்கப்படுகிறது.

## குறைவான காற்று மாசு: தமிழகத்தின் 3 நகரங்கள் சாதனை!

- நாட்டில் காற்று மாசு குறைவான நகரங்களில் திருச்சியின் பல்கலைப்பேரூர் பகுதி முதலிடம் பெற்றுள்ளது. முதல் 10 நகரங்களில் ராமநாதபுரம், மதுரை ஆகியவையும் இடம்பெற்றுள்ளன.
- மத்திய மாசுக் கட்டுப்பாட்டு வாரியம் (CPCB) அண்மையில் வெளியிட்ட காற்று தரக் குறியீடு (AQI) பட்டியலில் சுத்தமான காற்றுடைய பகுதியாக திருச்சியின் பல்கலைப்பேரூர் முதலிடத்தைப் பிடித்துள்ளது.
- அதேபோல் காற்று மாசு அதிகமுள்ள நகரங்களின் பட்டியலில் தலைநகர் தில்லி முதலிடத்தில் உள்ளது.
- காற்று மாசு குறைவான நகரங்கள் - மாநிலம்- ஏ.க்யூ.ஐ.
- பல்கலைப் பேரூர், திருச்சி - தமிழ்நாடு 20
- பாலசோர் - ஒடிஸா 23
- ஐசால் - மிஸோரம் 25
- ராமநாதபுரம் - தமிழ்நாடு 25
- சிக்கபல்லாபூர் - கர்நாடகம் 28
- மதிக்கேரி - கர்நாடகம் 29
- மதுரை - தமிழ்நாடு 29
- அதிக காற்று மாசு நகரங்கள் - மாநிலம் - ஏ.க்யூ.ஐ
- தில்லி - தில்லி யூனியன் பிரதேசம் 306
- மீரட் - உத்தர பிரதேசம் 293
- காஜியாபாத் - உத்தர பிரதேசம் 272
- பிவானி - ஹரியாணா 266
- ஹபூர் - உத்தர பிரதேசம் 261

## வரைவு பட்டியல் வெளியீடு

- தமிழ்நாடு முழுவதும் வரைவு வாக்காளர் பட்டியல் வெளியிடப்பட்டது.
- தமிழக தேர்தல் துறையின் இந்த பட்டியலின்படி, மாநிலத்தில் 6 கோடியே 27 லட்சத்து 30 ஆயிரத்து 588 வாக்காளர்கள் உள்ளனர்.
- மொத்த வாக்காளர்கள் எண்ணிக்கை:
- 6 கோடியே 27 லட்சத்து 30 ஆயிரத்து 588 (6,27,30,588).
- ஆண்கள்: 3 கோடியே 7 லட்சத்து 90 ஆயிரத்து 791 (3,07,90,791).
- பெண்கள்: 3 கோடியே 19 லட்சத்து 30 ஆயிரத்து 833 (3,19,30,833). மூன்றாம் பாலினத்தவர்: 8,964.
- அதிக வாக்காளர்கள் கொண்ட பேரவைத் தொகுதி: சோழிங்கநல்லூர் (6.76 லட்சம்)
- குறைந்த வாக்காளர்கள் கொண்ட தொகுதி: நாகை மாவட்டம் கீழ்வேளூர் (1.73 லட்சம்)

SIVARAJAVEL
IAS ACADEMY

## பாதம் பாதுகாப்போம் திட்டம்

- சர்க்கரை நோயாளிகளுக்கான 'பாதம் பாதுகாப்போம்' திட்டத்தை தமிழகத்தின் அனைத்து மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகள், அரசு மருத்துவமனைகளில் தொடங்குவதற்கான அரசாணையை தமிழக அரசு அக்டோபர் 28 அன்று வெளியிட்டது.




- 'பாதம் பாதுகாப்போம்' திட்டம் சர்க்கரை நோயினால் ஏற்படும் பாத பாதிப்புகளை தவிர்ப்பதற்கும், கால் இழப்புகள் ஏற்படுவதை தடுப்பதற்கும் வழிவகை செய்கிறது.
- மக்களைத் தேடி மருத்துவம் திட்டத்தின் கீழ் இத்திட்டம் கட்டமைக்கப்பட்டு ஒருங்கிணைந்த பாத மருத்துவ சேவைகளை 36 அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனைகள் மூலம் வழங்க திட்டமிடப்பட்டுள்ளது.
- நாட்டிலேயே இது போன்ற முன்னெடுப்பை அரசு மேற்கொள்வது இதுவே முதல் முறை.
- இத்திட்டத்தின் கீழ் 80 லட்சம் சர்க்கரை நோயாளிகளை பாத பரிசோதனைக்கு உட்படுத்த இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.




## ஒரே நாடு ஒரே தேர்தல் திட்டம்:

- மக்களவை மற்றும் மாநில சட்டப் பேரவைகளுக்கு ஒரே நேரத்தில் தேர்தல் நடத்துவதற்கு அரசமைப்புச் சட்டத்தில் திருத்தம் கொண்டு வர வாய்ப்பு.
- இந்திய அரசியலமைப்பில் பகுதி — XV, விதி 324 — 329 தேர்தல்கள் மற்றும் தேர்தல் ஆணையம் பற்றி குறிப்பிடுகிறது.
- மாநில சட்டப் பேரவைகளை கலைப்பது தொடர்பான பிரிவுகள்,'ஒரே நேரத்தில் தேர்தல்' என்ற வார்த்தையை சேர்க்க சட்டப் பிரிவு 327-ல் திருத்தம் கொண்டு வர வாய்ப்புள்ளதாக தகவல்.
- ஒரே நாடு ஒரே தேர்தல் திட்டம் தொடர்பாக முன்னாள் குடியரசுத் தலைவர் திரு. ராம்நாத் கோவிந்த் தலைமையில் செப்டம்பர் 2023 ல் உயர்மட்டக் குழு அமைக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

## உள்ளாட்சி தேர்தல்களில் மத்திய தேர்தல் ஆணையம்:

- மக்களவை, மாநில சட்டப்பேரவை, உள்ளாட்சி அமைப்புகளுக்கும் ஒரே நேரத்தில் தேர்தல் நடத்தும் வகையில் அரசமைப்புச் சட்டப் பிரிவு 324-ல் திருத்தம் செய்து 324A என்ற புதிய பிரிவைச் சேர்க்க மத்திய அரசு முடிவு.
- இந்திய அரசியலமைப்பு விதி 243K மற்றும் விதி 243ZA உள்ளாட்சி அமைப்புகளுக்கான தேர்தல்கள் பற்றி கூறுகிறது.
- மேற்குறிப்பிட்ட மசோதா மாநில விவகாரங்களுடன் சம்மந்தப்பட்டதால் 50% மாநிலங்களின் ஒப்புதல் அவசியமாகும்.
- இந்திய அரசியலமைப்பு விதி 368 அரசியலமைப்புத் திருத்தத்திற்கான பெரும்பான்மையைப் பற்றிக் கூறுகிறது.

## ரூ.2,000 நோட்டுகள் 98% திரும்பின:

- 2,000 ரூபாய் நோட்டுகளில் 98 சதவீதம் வங்கிக்கு திரும்பிவிட்டதாக இந்திய ரிசர்வ் வங்கி (ஆர்பிஐ) அறிவித்துள்ளது.
- 2016, நவம்பர் 8ல் பண மதிப்பிழப்பு நடவடிக்கை மேற்கொண்டபோது ரூ.2,000 அறிமுகப்படுத்தப்பட்டது.
- 2023 மே மாதம் 19ஆம் தேதி முதல் ரூ.2,000 நோட்டுகள் திரும்பப் பெறப்படுவதாக அறிவிக்கப்பட்டது.
- கடந்த 2023 ஜனவரியில் 'பண மதிப்பிழப்பு நடவடிக்கை செல்லும்' என்று உச்ச நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியிருக்கிறது.

## வெள்ளி கிரக ஆய்வுக்காக 2028-ல் வீனஸ் விண்கலம் ஏவப்படும்:

- வெள்ளி கிரகத்தை ஆய்வு செய்வதற்காக வீனஸ் ஆர்பிட்டர் மிஷன் திட்டம் மூலமாக விண்கலம் தயாரித்து அனுப்பப்பட உள்ளது.
- இந்தவிண்கலத்தில் மொத்தம் 19 அதிநவீன ஆய்வுக் கருவிகள் இடம்பெறும். அதில் 16 கருவிகள் உள்நாட்டு தொழில்நுட்பத்தில் தயாரிக்கப்பட உள்ளன.
- எஞ்சிய 3 சாதனங்கள் இந்தியா, ரஷ்யா, ஜெர்மனி, சுவீடன் ஆகிய நாடுகளின் பங்களிப்பில் வடிவமைக்கப்பட இருக்கின்றன.
- அனைத்து தயாரிப்பு பணிகளையும் முடித்து விண்கலத்தை எல்விஎம்-3 ராக்கெட் மூலமாக 2028 மார்ச் 29ம் தேதி விண்ணில் செலுத்த திட்டமிடப்பட்டுள்ளது.
- சுமார் 112 நாட்கள் பயணத்துக்கு பின்னர் ஜூலை 19-ம் தேதி வெள்ளி கிரகத்தை சென்றடையும்.

## மராத்தி, பாலி, பிராகிருதம், அசாமி, வங்க மொழிகளுக்கு செம்மொழி அந்தஸ்து:

- கடந்த அக்டோபர் 12, 2004 அன்று 'செம்மொழிகள்' என புதிய வகை மொழிகளை உருவாக்க மத்திய அரசு முடிவு செய்தது.
- அதன்படி 2004 ஆம் ஆண்டே முதலில் தமிழை செம்மொழியாக அறிவித்தது.
- அதன்பின் சமஸ்கிருதம் (2005), தெலுங்கு (2008), கன்னடம் (2008), மலையாளம் (2013) மற்றும் ஒடியா (2014) மொழிகளுக்கு செம்மொழி அந்தஸ்து வழங்கப்பட்டது.

- மராத்தி, பாலி, பிராகிருதம், அசாமி மற்றும் வங்க மொழிகளுக்கு தற்போது (2024) செம்மொழி அந்தஸ்து வழங்கப்பட்டுள்ளது.

## உத்தரகாண்ட் மாநிலம், 'தினசரி - நேர' மின் கட்டணத்தை அறிமுகப்படுத்தும் முதல் மாநிலமாக மாற உள்ளது:

- உத்தரகாண்ட் தனது 15.87 லட்சம் மின் நுகர்வோருக்கு தினசரி நேர மின் கட்டணத்தை அறிமுகப்படுத்தும் இந்தியாவின் முதல் மாநிலமாக மாற உள்ளது.
- இந்த நடவடிக்கையானது 2030 ஆம் ஆண்டுக்குள் புதைபடிவமற்ற எரிபொருட்களில் இருந்து 65% ஆற்றல் திறன் மற்றும் 2070 ஆம் ஆண்டில் நிகர பூஜ்ஜிய உமிழ்வை அடையும் இலக்கை நோக்கி செயல்பட உதவும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

## இந்திய கடற்பகுதியை கரியமில வாயு வெளியேற்றம் இல்லாத தளமாக மாற்றுவது குறித்த உயர்மட்ட மாநாடு:

- துறைமுகங்கள், கப்பல் போக்குவரத்து மற்றும் நீர்வழிகள் அமைச்சகம், ஆசிய வளர்ச்சி வங்கி இணைந்து நடத்திய, இந்திய கடற்பகுதியை கரியமில வாயு வெளியேற்றம் இல்லாத தளமாக மாற்றுவது குறித்த மாநாடு புதுதில்லியில் நடைபெற்றது.

### இலக்குகள்:

- 2047 -க்குள் இந்திய நீரில் உள்ள அனைத்து கப்பல்களையும் பசுமைக் கப்பல்களாக மாற்றுதல்.
- 2030 ஆம் ஆண்டுக்குள் கார்பன் அடர்த்தியை 45% குறைத்தல்.
- 2070-க்குள் நிகர பூஜ்ஜிய கரியமிலவாயு வெளியேற்றத்தைப் பூஜ்ஜியமாகக் குறைத்தல்.

## கஜிந்த் பயிற்சி - 2024

- இந்தியா-கஜகஸ்தான் கூட்டு ராணுவப்பயிற்சியின் 8 வது பதிப்பு கஜிந்த் -2024, உத்தரகாண்டில் தொடங்கி செப்டம்பர் 30 முதல் அக்டோபர் 13, 2024 வரை நடைபெறுகிறது .
- இந்தியாவுக்கும் கஜகஸ்தானுக்கும் இடையிலான பயிற்சி 2016 இல் 'பிரபால் டோஸ்டிக்' என்ற பெயரில் தொடங்கப்பட்டது.
- இரண்டாவது பதிப்பிற்குப் பிறகு , இது ஒரு நிறுவன அளவிலான பயிற்சியாக மேம்படுத்தப்பட்டு 'கஜிந்த்' எனப் பெயர் மாற்றப்பட்டது.

## பாரத்ஜென்:

- அறிவியல் மற்றும் தொழில்நுட்ப அமைச்சகம் பாரத்ஜெனை அறிமுகப்படுத்தியது, இது பொதுச் சேவை வழங்கலை மேம்படுத்த வடிவமைக்கப்பட்ட AI முயற்சியாகும்.
- நோக்கம்: இந்தியாவின் சமூக-கலாச்சார மற்றும் மொழியியல் பன்முகத்தன்மையை நிவர்த்தி செய்ய மொழி, பேச்சு மற்றும் கணினி பார்வை ஆகியவற்றில் அடிப்படை மாதிரிகளை உருவாக்குதல்.
- இது உலகின் முதல் அரசாங்க நிதியுதவியுடன் செயல்படுத்தப்படும் இந்திய மொழிகளுக்கான மல்டிமோடல் பெரிய மொழி மாதிரி (LLM - Multimodal Large Language Model) திட்டமாகும்.
- இது IIT மும்பை மற்றும் NM-ICPS (National Mission on Interdisciplinary Cyber-Physical Systems), கீழ் வழிநடத்தப்படுகிறது.

## தேசிய விவசாயக் குறியீடு

- இந்திய தரநிலைகள் பணியகம் (BIS) தற்போதுள்ள தேசிய கட்டிடக் குறியீடு மற்றும் தேசிய மின் குறியீடு ஆகியவற்றின் அடிப்படையில் தேசிய விவசாயக் குறியீட்டை (NAC) உருவாக்கும் செயல்முறையைத் தொடங்கியுள்ளது.
- BIS என்பது பல்வேறு பொருளாதாரத் துறைகளில் பல்வேறு தயாரிப்புகளுக்கான தரநிலைகளை அமைக்கும் தேசிய அமைப்பாகும்.
- NAC - இது வயல்களை தயாரித்தல், நுண்ணீர் பாசனம் மற்றும் நீர் பயன்பாடு போன்ற விவசாய நடைமுறைகளுக்கான ஒரு தரநிலையாகும்.
- குறிக்கோள்கள் - விவசாயிகள், வேளாண்மைப் பல்கலைக்கழகங்கள் மற்றும் இத்துறையில் ஈடுபட்டுள்ள அதிகாரிகளுக்கு வழிகாட்டியாக NAC செயல்படும்.

### NAC இன் இரண்டு பகுதிகள்:

- முதலாவது அனைத்து பயிர்களுக்கும் பொதுவான கொள்கைகளைக் கொண்டிருக்கும்.
- இரண்டாவது, நெல், கோதுமை, எண்ணெய் வித்துக்கள் மற்றும் பருப்பு வகைகள் போன்றவற்றுக்கான பயிர் சார்ந்த தரங்களைக் கையாளும்.

## PM E-DRIVE

- சார்ஜிங் உள்கட்டமைப்பை அமைப்பதன் மூலமும், இந்தியாவில் மின்சார வாகனங்களுக்கான உற்பத்தி சூழலை மேம்படுத்துவதன் மூலமும் மின்சார வாகனங்களை விரைவாக

ஏற்றுக்கொள்வதற்காக, PM E-DRIVE திட்டத்தை அரசாங்கம் அறிமுகப்படுத்தியுள்ளது.

- இத்திட்டம் அக்டோபர் 1, 2024 முதல் மார்ச் 31, 2026 வரை செயல்படுத்தப்படும்.
- தற்போது EMPS-2024 (Electric Mobility Promotion Scheme) ஆனது PM E-DRIVE திட்டத்தின் கீழ் இணைக்கப்படுகிறது.
- மானியம்: மின்சார இருசக்கர வாகனங்களுக்கான திட்டத்தின் கீழ் மானியம் பேட்டரி சக்தியின் அடிப்படையில் கிலோவாட் மணிநேரத்திற்கு ரூ. 5,000 ஆக நிர்ணயிக்கப்பட்டுள்ளது, ஆனால் ஒட்டுமொத்த ஊக்கத்தொகை முதல் ஆண்டில் ரூ.10,000 க்குள் இருக்கும்.
- இ-ரிக்ஷா உள்ளிட்ட மூன்று சக்கர வாகனங்களுக்கு முதல் ஆண்டில் ரூ.25,000 டிமாண்ட் இன்சென்டிவ் கிடைக்கும், இது இரண்டாவது ஆண்டில் ரூ.12,500 ஆக குறைக்கப்படும்.
- L5 பிரிவினருக்கு (சரக்கு மூன்று சக்கர வாகனங்கள்) முதல் ஆண்டில் 50,000 ரூபாயும், இரண்டாவது வருடத்திற்கு 25,000 ரூபாயும் பலன் கிடைக்கும்.

## இந்தியாவின் மின்சார வாகனக் கொள்கை:

- நோக்கம்: மின்சார வாகனங்களுக்கான துறையில் சீரான வளர்ச்சியை எளிதாக்குவது மற்றும் 2030 ஆம் ஆண்டுக்குள் 30% தனியார் கார்கள், 70% வணிக கார்கள், 40% பேருந்துகள் மற்றும் 80% இருசக்கர மற்றும் மூன்று சக்கர வாகனங்களில் EV விற்பனை என்ற லட்சிய இலக்கை அடைய வேண்டும்.
- தேசிய மின்சார இயக்கம் திட்டம் (NEMMP): கலப்பின மற்றும் மின்சார வாகனங்களை ஊக்குவிப்பதன் மூலம் தேசிய எரிபொருள் பாதுகாப்பை அடையும் இலக்குடன் NEMMP 2013 இல் தொடங்கப்பட்டது.
- FAME India திட்டம்: EV களின் உற்பத்தி மற்றும் விநியோகத்தை ஊக்குவிக்கும் வகையில் 2015 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது.
- ஜிஎஸ்டி குறைப்பு: இந்திய அரசாங்கம் மின்சார வாகனங்கள் மீதான சரக்கு மற்றும் சேவை வரியை (ஜிஎஸ்டி) 12% லிருந்து 5% ஆக குறைத்துள்ளது, இதனால் EV-கள் நுகர்வோருக்கு மிகவும் மலிவு விலையில் கிடைக்கும்.

# இந்திய-ஓமன் கடற்படை 5 நாள் கடல்சார் பாதுகாப்பு கூட்டுப்பயிற்சி

- இந்திய கடற்படை நீண்ட தூரப்பயிற்சிக்கு முதன் முறையாக ஓமன் நாட்டிற்கு பயணம் மேற்கொண்டுள்ளது.
- நீண்ட தூரப்பயிற்சிக்காக இந்திய கடற்படையின் முதலாவது பயிற்சி படைப்பிரிவு இந்திய கடற்படையின் 'திர்', 'ஷர்துல்' கப்பலிலும், இந்தியக் கடலோரக் காவல்படை வீரர்கள் 'வீரா' என்கிற கப்பலிலும் பயணித்து அக்டோபர் 5 ஆம் தேதி ஓமனில் உள்ள மஸ்கட் துறைமுக கடற்படை பகுதிக்கு சென்றுள்ளனர்.
- இந்திய கடற்படையும், இந்திய கடலோர காவல் படையும், ஓமன் ராயல் கடற்படையுடன் நிகழ் அக்டோபர் 5 ஆம் தேதி முதல் 9 ஆம் தேதி வரை பயணிக்கும்.
- கடந்த 10 ஆண்டுகளாக இந்த பயிற்சி தொடர்புகள் உள்ளது. இருப்பினும், ஓமன் நாட்டின் மஸ்கட்டுக்கு மூன்றாவது முறையாக முதலாவது பயிற்சிப் படைப்பிரிவு கப்பல் பயணம் மேற்கொண்டுள்ளது.

# நிலவுக்கு மனிதர்களை அனுப்புவதற்கான முன்னோடி திட்டம்: சந்திரயான்-5 திட்டத்திற்கு அனுமதி:

- சந்திரயான்-5 திட்டத்திற்கு தேசிய விண்வெளி ஆணையம் அனுமதி வழங்கி உள்ளது. இந்த திட்டத்தை இந்தியாவும் ஜப்பானும் இணைந்து மேற்கொள்ள உள்ளன.

## சந்திரயான் -1

- கடந்த 2008 அக்டோபர் 22-ம்தேதி ஸ்ரீஹரிகோட்டா சதீஷ் தவான் விண்வெளி மையத்தில் இருந்து சந்திரயான் 1 விண்கலம் ஏவப்பட்டது.
- இது நிலவை 312 நாட்கள் சுற்றியது. நிலவில் தண்ணீர் இருந்ததற்கான தடயங்களை சந்திரயான் -1 விண்கலம் கண்டுபிடித்தது.
- இதன் திட்ட இயக்குநராக தமிழ்நாட்டை சேர்ந்த மயில்சாமி அண்ணாதுரை பணியாற்றினார்.

## சந்திரயான் 2

- கடந்த 2019-ம் ஆண்டு ஜூலை 22-ம் தேதி சந்திரயான் 2 விண்கலம் விண்ணில் செலுத்தப்பட்டது. கடந்த 2019 செப்டம்பர் 8-ம் தேதி அந்த விண்கலம் நிலவில் தரையிறங்கும் என்று எதிர்பார்க்கப்பட்டது.
- ஆனால் சந்திரயான்-2 நிலவில் மோதி விபத்துக்குள்ளானது. இதில் லேண்டர், ரோவர் சேதமடைந்தன. எனினும் ஆர்பிட்டர் நிலவை சுற்றி வட்டமடித்து ஆய்வு செய்தது.
- சந்திரயான் 2 திட்ட இயக்குநராக சென்னையை சேர்ந்த முத்தையா வனிதா பணியாற்றினார்.

## சந்திரயான் 3

- கடந்த 2023-ம் ஆண்டு ஜூலை14-ம் தேதி சந்திரயான் 3 விண்கலம் செலுத்தப்பட்டது. இந்த விண்கலம் 2023-ம் ஆண்டு ஆகஸ்ட் 23-ம் தேதி நிலவின் தென் துருவத்தில் வெற்றிகரமாக தரையிறங்கியது.

- இதன்மூலம் நிலவின் தென்துருவத்தில் தரையிறங்கிய முதல் நாடு என்ற பெருமையை இந்தியா பெற்றது.
- சந்திரயான்-3 திட்ட இயக்குநராக தமிழ்நாட்டை சேர்ந்த வீரமுத்துவேல் பணியாற்றினார்.

### சந்திரயான்-4

- சந்திரயான்-4 திட்டத்திற்கு மத்திய அமைச்சரவை கடந்த ssசெப்டம்பர் 18-ம் தேதி ஒப்புதல் அளித்தது. இந்த திட்டம் வரும் 2027-ம் ஆண்டில் செயல்படுத்தப்படும் என்று எதிர்பார்க்கப் படுகிறது.
- இதன்மூலம் நிலவில் இருந்து 3 கிலோ அளவுக்கு கனிமங்களை இந்தியாவுக்கு எடுத்து வர திட்டமிடப்பட்டு இருக்கிறது.

### சந்திரயான்-5

- சந்திரயான்-5 திட்டத்திற்கு தேசிய விண்வெளி ஆணையம் அனுமதி வழங்கி உள்ளது.
- இந்த திட்டத்தை இந்தியாவும் ஜப்பானும் இணைந்து மேற்கொள்ள உள்ளன. இதுகுறித்து இஸ்ரோ தலைவர் சோம்நாத் கூறியதாவது:
- சந்திரயான் -5 திட்டத்தை இந்தியாவும் ஜப்பானும் இணைந்து செயல்படுத்த உள்ளன. இந்த திட்டத்துக்கு நிலவு துருவ ஆய்வு திட்டம் (லூபெக்ஸ்) என்று பெயரிடப்பட்டு உள்ளது.
- இரு நாடுகளின் கூட்டு திட்டத்தில் ஜப்பான் விண்வெளி ஆய்வு மையம், ரோவரை தயாரிக்க உள்ளது.
- இந்தியாவின் இஸ்ரோ விண்வெளி ஆய்வு மையம் லேண்டரை தயாரிக்க உள்ளது.
- கடந்த ஓராண்டாக லேண்டர், ரோவருக்கான வடிவமைப்பு பணிகளை மேற்கொண்டு வருகிறோம்.
- சந்திரயான்-5 திட்டத்தில் அதிகசக்தி வாய்ந்த, அதிக எடை கொண்ட லேண்டர், ரோவரை பயன்படுத்த உள்ளோம். இது நிலவுக்கு மனிதர்களை அனுப்புவதற்கான முன்னோடி திட்டமாகும்.

### புதிய ஏவுகலன் மாதிரி

- விண்வெளி நிலையம் அமைப்பதற்கு முக்கியத்துவம் வாய்ந்த அடுத்த தலைமுறை ஏவுகலன் (NGLV — Next Generation Launch Vehicle) மேம்பாட்டுக்கான மாதிரி விரைவில் அறிமுகம் செய்யப்படும்.
- இந்தியா சார்பில் விண்வெளி நிலையம் அமைப்பதற்கும், 2040-ம் ஆண்டுக்குள் இந்திய விண்வெளி வீரர்கள் நிலவில் தரையிறங்கவும் இந்த ஏவுகலன் உதவியாக இருக்கும்.
- இந்திய விண்வெளிக் கொள்கை 2023-ல் வெளியிடப்பட்டது.
- இது விண்வெளித்துறையில் தனியார் பங்களிப்பை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டது.

### இந்தியா — மாலத்தீவு உறவு

- இந்தியா — மாலத்தீவு இடையே முக்கியத்துவம் வாய்ந்த
- கரன்சி மாற்று ஒப்பந்தம்,
- இந்திய தேசிய பாதுகாப்புப் பல்கலைக்கழகம், மாலத்தீவு காவல் மற்றும் சட்ட அமலாக்கக் கல்லூரி இடையே ஒத்துழைப்புக்கான புரிந்துணர்வு ஒப்பந்தம்,
- ஊழல் தடுப்பில் ஒத்துழைக்க சிபிஐ மற்றும் மாலத்தீவின் ஊழல் தடுப்பு ஆணையம் இடையிலான புரிந்துணர்வு ஒப்பந்தம்,
- மாலத்தீவு நீதித்துறை அதிகாரிகளுக்கான பயிற்சி, திறன் மேம்பாட்டுத் திட்டங்களுக்கான இந்திய தேசிய நீதித்துறை அகாடமி மற்றும் மாலத்தீவுகளின் நீதித்துறை சேவைகளின் ஆணையம் இடையிலான புதுப்பித்தல் ஒப்பந்தம்.
- விளையாட்டு மற்றும் இளைஞர் விவகாரங்களில் ஒத்துழைப்புக்கான புதுப்பித்தல் ஒப்பந்தம் கையெழுத்தானது.
- மாலத்தீவு அதிபர் முகமது மூயிஸ் 5 நாள் அரசு பயணமாக இந்தியா வருகை.
- மாலத்தீவில் ரூபே அட்டை பரிவர்த்தனை சேவையும், ஹனிமாதூ விமான நிலையத்தில் இந்தியா உதவியுடன் கட்டப்பட்ட விமான ஓடுதளமும் திறந்து வைக்கப்பட்டது.
- இந்தியா மாலத்தீவிற்கு 40 கோடி டாலர் (3,359 கோடி) கடனுதவி.

### ஸ்ரீஹரிகோட்டாவில் 3-வது ஏவுதளம்

- ஸ்ரீஹரிகோட்டாவில் 3-வது ஏவுதளம் அமைக்கப்படும் என்று இஸ்ரோ தலைவர் சோம்நாத் தெரிவித்துள்ளார்.
- ஆந்திராவின் ஸ்ரீஹரிகோட்டாவில் சதீஷ் தவான் விண்வெளி ஆய்வு மையம் அமைந்துள்ளது.
- இங்கிருந்து பிஎஸ்எல்வி, ஜிஎஸ்எல்வி ராக்கெட்டுகளின் உதவியோடு செயற்கைக்கோள்கள் விண்ணில் ஏவப்படுகின்றன.

- ஸ்ரீஹரிகோட்டாவில் தற்போது 2 ஏவுதளங்கள் உள்ளன. இதில் முதல் ஏவுதளத்தில் இருந்து பிஎஸ்எல்வி ராக்கெட்டுகள் விண்ணில் ஏவப்படுகின்றன.
- இந்த ஏவுதளத்தில் இருந்து ஜிஎஸ்எல்வி ராக்கெட்டுகளை விண்ணில் செலுத்த முடியாது.
- இரண்டாவது ஏவுதளம் பிஎஸ்எல்வி ராக்கெட்டுக்காக உருவாக்கப்பட்டன.
- இந்த ஏவுதளத்தில் பல்வேறு மாற்றங்கள் செய்யப்பட்டு ஜிஎஸ்எல்வி ராக்கெட்டுகள் விண்ணில் செலுத்தப்படுகின்றன.
- எதிர்பாராதவிதமாக 2-வது ஏவுதளத்தில் ராக்கெட் வெடித்துச் சிதறினால் அந்த ஏவுதளம் சேதமடையும்.
- ஜிஎஸ்எல்வி ராக்கெட்டுகளை ஏவ முடியாத சூழல் ஏற்படும். இஸ்ரோவின் அனைத்து விண்வெளி திட்டங்களும் தாமதமடையும்.
- முன்னெச்சரிக்கையாக ஜிஎஸ்எல்வி மட்டுமன்றி, என்ஜிஎல்வி (புதிய தலைமுறை ராக்கெட்) ராக்கெட்டுகளையும் ஏவும் வசதி கொண்ட 3-வது ஏவுதளத்தை ஸ்ரீஹரிகோட்டாவில் அமைக்க முடிவு செய்யப்பட்டு உள்ளது.
- என்ஜிஎல்வி ராக்கெட் தயாரிப்பு திட்ட இயக்குநர் சிவகுமார் கூறும்போது, 20 டன் எடையை சுமந்து செல்லும் திறன் கொண்ட அதிநவீன என்ஜிஎல்வி ராக்கெட் தயாரிப்பு பணிகளில் இஸ்ரோ தீவிரமாக ஈடுபட்டு வருகிறது. இந்த ராக்கெட் 3 நிலைகளைக் கொண்டதாக இருக்கும். இதில் முதல் நிலையை மீண்டும் பயன்படுத்த முடியும்".

## 70வது தேசிய திரைப்பட விழா: ஏ.ஆர். ரகுமானுக்கு தேசிய விருது வழங்கிய ஜனாதிபதி:

- ஆண்டுதோறும் இந்திய திரைப்படங்களையும், கலைஞர்களையும் ஊக்குவிக்கும் விதமாக இந்திய திரை படைப்புகளுக்கு இந்திய அரசால் தேசிய விருது வழங்கப்படுகிறது.
- இதற்கு ஒவ்வொரு ஆண்டும் அரசால் நியமிக்கப்படும் தேசிய தேர்வுக்குழு இதனை தேர்ந்தெடுக்கிறது.
- 2022-ம் ஆண்டின் சிறந்த படத்துக்கான விருது அறிவிக்கப்பட்ட நிலையில், டெல்லியில் 70-வது தேசிய திரைப்பட விருதுகள் வழங்கும் விழா நடைபெறுகிறது.
- விழாவில் ஜனாதிபதி திரவுபதி முர்மு தேசிய விருது வென்ற திரைப்பட கலைஞர்களுக்கு தேசிய விருதுகளை வழங்கி கௌரவிக்கிறார்.
- இதில் தமிழில் மணிரத்னம் இயக்கத்தில் வெளியான 'பொன்னியின் செல்வன்' திரைப்படமானது சிறந்த படம், சிறந்த ஒளிப்பதிவு (ரவிவர்மன்), சிறந்த பின்னணி இசை (ஏ. ஆர்.ரகுமான்), சிறந்த ஒலிப்பதிவு (ஆனந்த் கிருஷ்ணமூர்த்தி) ஆகிய பிரிவுகளில் 4 விருதுகளை வென்றுள்ளது.
- இந்த விழாவில் 'பொன்னியின் செல்வன்' பாகம் 1 படத்தின் இசை அமைப்பாளர் ஏ.ஆர் ரகுமானுக்கு சிறந்த இசையமைப்பாளருக்கான தேசிய விருதை ஜனாதிபதி வழங்கியுள்ளார். இது ஏ.ஆர்.ரகுமானின் ஏழாவது தேசிய விருது என்பது குறிப்பிடத்தக்கது.

## இந்திய அரசியலமைப்பின் ஐந்து மற்றும் ஆறாவது அட்டவணை

- இந்திய அரசியலமைப்பின் ஐந்து மற்றும் ஆறாவது அட்டவணை பழங்குடியினரின் உரிமைகளைப் பாதுகாப்பதற்காக அரசியலமைப்பு வல்லுநர்களால் உருவாக்கப்பட்டன.
- விடுதலைக்கு முன்பு ஆங்கிலேயர்கள் பழங்குடியினரின் மரபார்ந்த உரிமைகளை அங்கீகரிக்கவில்லை. மேலும் பழங்குடியினர் கட்டுப்படுத்தப்பட்டனர்.
- விடுதலைக்குப் பின்னர் இந்திய அரசியலமைப்பில் ஐந்து மற்றும் ஆறாவது அட்டவணை பழங்குடியினரின் உரிமைகளைப் பாதுகாப்பதற்காக உருவாக்கப்பட்டன.

### ஐந்தாவது அட்டவணை

- ஐந்தாம் அட்டவணை என்பது குடியரசு தலைவரால் அட்டவணைப் பகுதிகள் என்று அறிவிக்கப்பட்ட நிலப்பகுதிகளுக்கு பொருந்தக் கூடியது.
- ஒரு மாநிலத்தின் குறிப்பிட்ட நிலப்பகுதியை அட்டவணைப் பகுதிகள் என்று அறிவிக்கலாம்.
- தற்போது 10 மாநிலங்களில் உள்ள சில நிலப்பகுதிகள் அட்டவணைப் பகுதிகள் என்று அறிவிக்கப்பட்டுள்ளன.
- அட்டவணைப் பகுதிகளில் நாடாளுமன்றம், மாநில சட்டமன்றத்தால் நிறைவேற்றப்பட்ட சட்டம் செல்லாது என்றோ அல்லது குறிப்பிட்ட மாற்றங்களுடன் பொருந்தும் என்றோ அம்மாநிலத்தின் ஆளுநர் அறிவிக்கலாம்.

### ஆறாவது அட்டவணை

- அஸ்ஸாம், மேகாலயா, மிசோரம், திரிபுரா ஆகிய மாநிலங்களில் பழங்குடிப் பகுதிகள் என்று அதிகாரப் பூர்வமாக அறிவிக்கப்பட்ட நிலப் பகுதிகளுக்கு ஆறாவது அட்டவணை பொருந்தும்.
- இந்த நான்கு மாநிலங்களில் மொத்தம் 10 பழங்குடிப் பகுதிகள் உள்ளன.

- இந்தப் பகுதிகளில் தன்னாட்சி பெற்ற மாவட்ட குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன.
- இந்தப் பகுதிகளில் தொடக்கப் பள்ளிகள், மருத்துவமனைகள், சாலைகள், நீர்பாதைகள், ஆகியவற்றிற்கான அதிகாரமும் இந்த குழுக்களிடம் உள்ளன.
- தற்போது லடாக் யூனியன் பிரதேசத்தையும் ஆறாவது அட்டவணையில் சேர்ப்பதற்கான கோரிக்கைகள் வலுப்பெற்று வருகின்றன.

## டிராக்கோமா

- சமீபத்தில், உலக சுகாதார அமைப்பு (WHO) இந்திய அரசாங்கம் ட்ரக்கோமாவை ஒரு பொது சுகாதாரப் பிரச்சனையிலிருந்து நீக்கியுள்ளதாக அறிவித்தது.
- தென்கிழக்கு ஆசிய பிராந்தியத்தில் இந்த மைல்கல்லை எட்டிய மூன்றாவது நாடு இந்தியாவாகும்.

### டிராக்கோமா பற்றி:

- கண்களை பாதிக்கும் பாக்டீரியா தொற்று ஆகும்.
- இது கிளமிடியா டிராக்கோமாடிஸ் என்ற பாக்டீரியாவால் ஏற்படுகிறது.
- பரவும் முறை: இது தொற்றக்கூடியது பாதிக்கப்பட்டவர்களின் கண்கள், கண் இமைகள், மூக்கு அல்லது தொண்டை சுரப்புகளின் மூலம் பரவுகிறது.
- சிகிச்சையளிக்கப்படாவிட்டால் அது மீள முடியாத குருட்டுத் தன்மையை ஏற்படுத்துகிறது.
- மோசமான சுற்றுச்சூழல் நிலைமைகளில் வாழும் சமூகங்களில் இது காணப்படுகிறது.
- WHO ட்ரக்கோமாவை புறக்கணிக்கப்பட்ட வெப்பமண்டல நோயாகக் குறிப்பிட்டுள்ளது மற்றும் அதன் மதிப்பீடு உலகளவில் 150 மில்லியன் மக்கள் ட்ரக்கோமாவால் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் அவர்களில் 6 மில்லியன் பேர் பார்வையற்றவர்கள் அல்லது பார்வைக் குறைபாடுள்ள சிக்கல்களின் அபாயத்தில் இருப்பதாகவும் தெரிவிக்கிறது.

## இந்திய அரசின் முன்முயற்சிகள்

- இந்திய அரசாங்கம் 1963 ஆம் ஆண்டில் தேசிய டிராக்கோமா கட்டுப்பாட்டுத் திட்டத்தை அறிமுகப்படுத்தியது, பின்னர் டிராக்கோமா கட்டுப்பாட்டு முயற்சிகள் பார்வையற்ற தன்மைக்கான இந்தியாவின் தேசிய திட்டத்தில் (NPCB) ஒருங்கிணைக்கப்பட்டன.
- இதன் விளைவாக, 2017 இல், இந்தியா தொற்று டிராக்கோமாவிலிருந்து விடுபட்டதாக அறிவிக்கப்பட்டது. இருப்பினும், 2019 முதல் 2024 வரை இந்தியாவின் அனைத்துமாவட்டங்களிலும் ட்ரக்கோமா வழக்குகளுக்கான கண்காணிப்பு தொடர்ந்தது.
- 2021-24 ஆம் ஆண்டு முதல் பார்வையற்ற தன்மை மற்றும் பார்வைக் குறைபாட்டைக் கட்டுப்படுத்துவதற்கான தேசிய திட்டத்தின் (NPCBVI) கீழ், நாட்டின் 200 உள்ளூர் மாவட்டங்களில் தேசிய டிராக்கோமாட்டஸ் ட்ரிச்சியாசிஸ் (TT மட்டும்) கணக்கெடுப்பு நடத்தப்பட்டது, இது WHO ஆல் நிர்ணயம் செய்யப்பட்ட ஆணையாகும். டிராக்கோமாவை ஒரு பொது சுகாதார பிரச்சனையாக இந்தியா நீக்கியுள்ளது.
- மொத்தம் 17 நாடுகள் ட்ரக்கோமாவை பொது சுகாதார பிரச்சனையாக நீக்கியுள்ளன.

## கட்காரி பழங்குடியினர்

- சமீபத்தில் புனேவில் உள்ள மாலே கிராமத்தில் நடைபெற்ற சிறப்பு விழாவில் கட்காரி பழங்குடியினத்தைச் சேர்ந்த 550 பேருக்கு வகுப்புச் சான்றிதழ் வழங்கப்பட்டது.
- கட்காரி எனப்படுவது மகாராஷ்டிரா (புனே, ராய்காட் மற்றும் தானே மாவட்டங்கள்) மற்றும் குஜராத்தின் சில பகுதிகளில் காணப்படும் ஒரு பழமையான பழங்குடியாகும்.

## தேசிய மனித உரிமைகள் ஆணையத்தின் (NHRC) 31- வது நிறுவன தினம்

- 1993-ஆம் ஆண்டு இயற்றப்பட்ட மனித உரிமைகள் சட்டத்தின்படி தேசிய மனித உரிமைகள் ஆணையம் இந்தியாவில் அக்டோபர் 12, 1993-ஆம் ஆண்டு ஏற்படுத்தப்பட்டது.
- இவ்வாணையத்தின் தலைவர் ஓய்வு பெற்ற உச்சநீதிமன்றத்தின் தலைமை நீதிபதி அல்லது ஓய்வு பெற்ற உச்சநீதிமன்ற நீதிபதியாக இருப்பார்.
- ஆணையத்தின் தலைவர் 3 ஆண்டுகள் அல்லது 70 வயது வரை இப்பதவியில் பணியாற்றலாம்.
- தேசிய மனித உரிமைகள் ஆணையத்தின் தலைமையிடம் புதுடில்லி ஆகும்.
- தேசிய மனித உரிமைகள் ஆணையத்தின் தற்போதைய தலைவர் : விஜய பாரதி சயானி
- மாநில மனித உரிமைகள் ஆணையம் தமிழகத்தில் 1997-ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 17-ஆம் தேதி நிறுவப்பட்டது.

TDP1

- கொல்கத்தாவில் உள்ள இந்திய அறிவியல்

- அமைப்புசாரா தொழிலாளர்களுக்கான 'இஷ்ரம்-ஓரிடத் தீர்வை' மத்திய தொழிலாளர் நலன், வேலைவாய்ப்பு, இளைஞர் நலன், விளையாட்டுத் துறை அமைச்சர் 2024, அக்டோபர் 21 அன்று தொடங்கி வைத்தார்.

### EShram பற்றி

- தோற்றம்: அமைப்புசாரா தொழிலாளர்களின் விரிவான தரவுத்தளத்தை வழங்குவதற்காகவும், நலத்திட்டங்களை அணுகுவதற்கான தளமாக செயல்படுவதற்காகவும் ஆகஸ்ட் 26, 2021 அன்று தொடங்கப்பட்டது.
- நோக்கம்: அமைப்புசாரா தொழிலாளர்களுக்கு ஒரே ஒரு தீர்வாக செயல்படுதல், தகவல்களை ஒருங்கிணைத்தல் மற்றும் சமூக பாதுகாப்பு மற்றும் நலத்திட்டங்களை எளிதாக அணுகுதல்.
- அமைச்சகம்: தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு அமைச்சகம்.

## 8 வருட பிராந்திய இணைப்புத் திட்டம்

- சாதாரண மக்களும் விமானப் பயணத்தை மேற்கொள்ள வேண்டும் என்ற திட்டத்தில் பிராந்திய இணைப்புத் திட்டம் கடந்த 2016ம் ஆண்டு அக்டோபர் 21ம் நாள் தொடங்கப்பட்டது.
- அதன்படி, 2வது மற்றும் 3வது தர நகரங்கள் விமானப் போக்குவரத்துடன் இணைக்கப்பட்டது.
- தற்போது இத்திட்டம் தொடங்கப்பட்டு 8 வருடங்களை நிறைவு செய்துள்ளது.
- பிராந்திய இணைப்புத் திட்டம் (RCS - Regional Connectivity Scheme) — UDAN (Ude Desh Ka Aam Nagrik) என்பது இந்தியாவின் தேசிய சிவில் விமானப் போக்குவரத்துக் கொள்கையின் (NCAP) 2016 இன் ஒரு அங்கமாகும்.
- இது 2016 ஆம் ஆண்டில் சிவில் விமானப் போக்குவரத்து அமைச்சகத்தால் (MoCA) 10 ஆண்டு தொலைநோக்குப் பார்வையுடன் தொடங்கப்பட்டது.
- இது இந்தியாவில் குறிப்பாக தொலைதூர மற்றும் பின்தங்கிய பகுதிகளில் விமான உள்கட்டமைப்பு மற்றும் இணைப்பை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- முதல் UDAN விமானம் 2017 இல் புறப்பட்டு, சிம்லாவிலிருந்து புது தில்லியை இணைத்தது.
- இத்திட்டம் நாட்டில் செயல்படும் விமான நிலையங்களின் எண்ணிக்கையை 2014 இல் 74 இல் இருந்து 2024 இல் 157 ஆக இரு மடங்காக அதிகரித்துள்ளது.
- மேலும் 2047 க்குள் இந்த எண்ணிக்கையை 350-400 ஆக உயர்த்த இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

## பிரதான் மந்திரி பாரதிய ஜனௌஷதி பரியோஜனா(PMBJP)

- பிரதான் மந்திரி பாரதிய ஜனௌஷதி பரியோஜனா (PMBJP), ஆயிரம் கோடி ரூபாய் மதிப்பிலான விற்பனையை எட்டியதன் மூலம் குறிப்பிடத்தக்க மைல்கல்லை எட்டியுள்ளது.
- 2008 ஆம் ஆண்டு மத்திய ரசாயனங்கள் மற்றும் உரங்கள் அமைச்சகத்தின் மருந்துத் துறையால் தொடங்கப்பட்டது.
- நோக்கம்: அனைவருக்கும், குறிப்பாக பின்தங்கியவர்களுக்கு, தரமான ஜெனரிக் மருந்துகளை மலிவு விலையில் வழங்குதல்.
- நடைமுறை: இந்த மருந்துகளை வழங்குவதற்காக ஜனௌஷதி கேந்திராக்கள் (மக்கள் மருந்தகம்) எனப்படும் பிரத்யேக விற்பனை நிலையங்கள் நிறுவப்பட்டுள்ளன.
- இவை மிகவும் குறைவான விலையில் பொதுவான மருந்துகளை வழங்குகின்றன.

- வெளிச்சந்தையில் கிடைக்கும் விலையுயர்ந்த பிராண்டட் மருந்துகளின் வீரியமும் இந்த மருந்துகளின் வீரியமும் ஒரே மாதிரியாக உள்ளன.
- பிரதம மந்திரி பாரதிய ஜனௌஷதி பரியோஜனா திட்டத்தின் கீழ் முயற்சிகள்
- ஜன் ஔஷதி ஆக்ஸோ-மக்கும் சானிடரி நாப்கின்கள் - இந்தியாவில் மாதவிடாய் சுகாதாரம் குறைவாக இருப்பதால் ஜன் ஔஷதி கேந்திராக்களில் சானிட்டரி நாப்கின்கள் 1 ரூபாயில் வழங்கப்படுகிறது.
- ஜனௌஷதி திவாஸ் - ஜெனரிக் மருந்துகளின் பயன்பாடு குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்த ஒவ்வொரு ஆண்டும் மார்ச் 1 முதல் மார்ச் 7 வரை ஜனௌஷதி திவாஸ் கொண்டாடப்படுகிறது.
- ஜன் ஔஷதி சுகம் செயலி - e-aushadhi appl என்றும் அழைக்கப்படுகிறது, இது மருந்து தயாரிப்புகள், இரசாயனங்கள் மற்றும் உரங்கள் அமைச்சகத்தால் உருவாக்கப்பட்டது மற்றும் ஆகஸ்ட் 2019 இல் தொடங்கப்பட்டது. பயன்பாடு அருகிலுள்ள ஜன் ஔஷதி கேந்திராக்களைக் கண்டறிய உதவுகிறது.

## 'முத்ரா' கடன் வரம்பு ரூ.20 லட்சமாக உயர்வு:

- நாட்டில் வேளாண் சாராத சிறுதொழில்களை ஊக்குவிக்கும் பிரதமரின் 'முத்ரா' திட்டத்தின்கீழ் கடன் வரம்பு ரூ.10 லட்சத்தில் இருந்து ரூ.20 லட்சமாக உயர்த்தப்பட்டுள்ளது.
- முத்ரா (Micro Units Development and Refinance Agency) திட்டம், பிரதான் மந்திரி முத்ரா யோஜனா (பிஎம்எம்ஒய்) திட்டத்தின் கீழ், நாட்டில் குறு, சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்களை (MSME) அமைப்பதற்கு நிதியளிப்பதற்காக ஏப்ரல் 8, 2015 அன்று நிறுவப்பட்டது.
- சமூகத்தின் பின்தங்கிய பிரிவினரிடையே தொழில்முனைவை ஊக்குவிக்கும் வகையில் இது திட்டமிடப்பட்டுள்ளது.
- நோக்கம்: இது கார்ப்பரேட் அல்லது விவசாயத் துறைகளின் ஒரு பகுதியாக இல்லாத சிறு மற்றும் குறு நிறுவனங்களுக்கு 20 லட்சம் வரை கடன்களை வழங்குதல்.
- வணிக வங்கிகள், வட்டார கிராமப்புற வங்கிகள் (RRBs), சிறு நிதி வங்கிகள், மைக்ரோ நிதி நிறுவனங்கள் (MFI), மற்றும் வங்கி அல்லாத நிதி நிறுவனங்கள் (NBFCs) போன்ற பல்வேறு நிறுவனங்களால் இந்த நிதி வசதிகள் விரிவுபடுத்தப்பட்டுள்ளன.

### கடன்களின் வகைகள்

- ஷிஷு (INR 50,000 வரை கடன்)
- கிஷோர் (INR 50,000க்கு மேல் மற்றும் 5 லட்சம் ரூபாய் வரை)
- தருண் (INR 5 லட்சத்திற்கு மேல் மற்றும் 10 லட்சம் ரூபாய் வரையிலான கடன்கள்)
- தருண் பிளஸ் (INR 10 லட்சத்திற்கு மேல் மற்றும் 20 லட்சம் ரூபாய் வரையிலான கடன்கள்)

## இந்திய விண்வெளி ஸ்டார்ட் அப்களை ஊக்குவிக்க ரூ.1,000 கோடி நிதிக்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல்

- அடுத்த ஐந்தாண்டுகளில் சுமார் 40 விண்வெளி ஸ்டார்ட்-அப்களை ஆதரிக்கும் நோக்கில் ரூ.1,000 கோடி துணிகர மூலதன (VC) நிதிக்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.
- IN-SPACe -இன் கீழ் தொடங்கப்பட்ட இந்த நிதி, இந்தியாவின் வளர்ந்து வரும் விண்வெளித் துறையில் தனியார் முதலீட்டை ஈர்க்கும் மற்றும் புதுமைகளை ஊக்குவிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.
- குஜராத்தில் உள்ள GIFT (Gujarat International Finance Tec-City) நகரம் விண்வெளி தொழில்நுட்பத்திற்கான உலகளாவிய மையமாக வளர்ந்து வருகிறது.
- செயற்கைக்கோள் ஏவுதலுக்கு ஜிஎஸ்டி விலக்கு மற்றும் R&Dக்கு வருமான வரிச் சலுகைகள் போன்ற வரிச் சலுகைகளை அரசாங்கம் அறிமுகப்படுத்தியுள்ளது.

## இந்திய ரயில்வேக்கான அம்ரித் பாரத் நிலைய திட்டம்

- அம்ரித் பாரத் நிலையம் திட்டம், நீண்ட கால தொலைநோக்கு பார்வையுடன் தொடர்ச்சியான அடிப்படையில் ரயில் நிலையங்களை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- அமிர்த் பாரத் நிலையம் திட்டம் இந்திய ரயில்வேயில் ரயில் நிலையங்களை மேம்படுத்துவதற்காக பிப்ரவரி 2023-ல் தொடங்கப்பட்டது.
- இத்திட்டம் 1275 ரயில் நிலையங்களை மேம்படுத்த/நவீனப்படுத்த திட்டமிடுகிறது.
- சென்னை எம்ஜிஆர் சென்ட்ரல், சென்னை எழும்பூர் உட்பட தமிழகத்தில் 73 ரயில் நிலையங்கள் மேம்படுத்தப்பட உள்ளன.

## கால்நடை பெருந்தொற்றுநோய் தடுப்பு நிதிய திட்டம்

- மத்திய மீன்வளம், கால்நடை பராமரிப்பு மற்றும் பால்வளத்துறை அமைச்சர், "இந்தியாவில் தொற்றுநோய்க்கான தயார்நிலை மற்றும்

பதிலளிப்புக்காக இந்தியாவில் விலங்குகளின் சுகாதாரப் பாதுகாப்பை வலுப்படுத்துதல்" என்ற தொற்றுநோய் நிதித் திட்டத்தை புதுதில்லியில் தொடங்கி வைத்தார்.

- தொற்றுநோய் நிதி திட்டம் என்பது G20 தொற்றுநோய் நிதியத்தால் நிதியளிக்கப்பட்ட $25 மில்லியன் முன்முயற்சியாகும்.

## பிரதான் மந்திரி வன்பந்து கல்யாண் யோஜனா (PMVKY)

- பிரதான் மந்திரி வன்பந்து கல்யாண் யோஜனா (PMVKY) என்பது அக்டோபர் 28, 2014 அன்று தொடங்கப்பட்ட ஒரு முக்கிய முயற்சியாகும்.
- இந்த லட்சியத் திட்டம், நாட்டின் மக்கள்தொகையில் சுமார் 8.9% உள்ள பழங்குடி சமூகங்கள் எதிர்கொள்ளும் தனித்துவமான சவால்களை எதிர்கொள்ளும் ஒரு விரிவான உத்தியாகக் கருதப்பட்டது.
- இமயமலை முதல் அந்தமான் மற்றும் நிக்கோபார் தீவுகள் வரை பல்வேறு பகுதிகளில் 700 க்கும் மேற்பட்ட பழங்குடியினர் பரவி உள்ளனர்.




### PMVKY இன் கீழ் ஆறு முக்கிய படிகள்

- பிரதான் மந்திரி ஆதி ஆதர்ஷ் கிராம் யோஜனா (PMAAGY)
- குறிப்பிட்ட பாதிக்கப்படக்கூடிய பழங்குடி குழுக்களின் (PVTGs) வளர்ச்சி
- பழங்குடி ஆராய்ச்சி நிறுவனங்களுக்கான ஆதரவு (TRI)
- முன் மெட்ரிக் உதவித்தொகை
- பின் மெட்ரிக் கல்வி உதவித்தொகை
- திட்ட மேலாண்மை அலகுகளுக்கான நிர்வாக உதவி




## ஜப்பானில் 5000 மீட்டர் ஓட்டத்தில் இந்தியாவின் குல்வீர் சிங் தேசிய சாதனையை முறியடித்தார்

- ஜப்பானின் நிகாட்டாவில் நடைபெற்ற உலக தடகள கான்டினென்டல் சுற்றுப்பயணத்தின் யோகிபோ தடகளசவால் கோப்பையில் ஆடவர் 5000 மீட்டர் ஓட்டத்தில் தங்கம் வென்று இந்திய வீரர் குல்வீர் சிங் புதிய தேசிய சாதனை படைத்தார்.
- தனது சொந்த தேசிய சாதனையை மேம்படுத்த 13:11.82 நேரத்தில் பந்தயத்தை வென்றார்.

## வெள்ளிப் பதக்கம் வென்றார் தீபிகா குமாரி :

- மெக்சிகோ நாட்டில் உள்ள டிலாக்ஸ்கலா நகரில் உலகக் கோப்பை வில்வித்தை போட்டி நடைபெற்று வருகிறது.
- இதில் மகளிருக்கான ரீகர்வ் பிரிவு இறுதி சுற்றில் போட்டித் தரவரிசையில் 3-வது இடத்தில் உள்ள இந்தியாவின் தீபிகா குமாரி, பாரிஸ் ஒலிம்பிக்கில் வெள்ளிப் பதக்கம் வென்ற சீன அணியில் இடம் பிடித்திருந்த லி ஜியாமனுடன் மோதினார்.
- இந்த ஆட்டத்தில் தீபிகா குமாரி 0-6 என்ற கணக்கில் தோல்வி அடைந்து வெள்ளிப் பதக்கம் வென்றார். உலகக் கோப்பை வில்வித்தை தொடரில் தீபிகா குமாரி பதக்கம் வெல்வது இது 5-வது முறையாகும்.

## ஹாக்கி: ஓய்வுபெற்றார் ராணி ராம்பால்

- இந்திய மகளிர் ஹாக்கி அணியின் முன்னாள் கேப்டன் ராணி ராம்பால் (29), ஓய்வு பெறுவதாக அறிவித்தார்.
- 2021 ஆம் ஆண்டு டோக்கியோ ஒலிம்பிக்கில் இந்திய மகளிர் ஹாக்கி அணியைத் தலைமைத் தாங்கிய ராணி ராம்பால், இந்திய அணியை நான்காவது இடத்திற்கு முன்னேற்றினார்.
- விளையாட்டுத் துறையில் உச்சமான மேஜர் தியான்சந்த் கேல் ரத்னா விருது (2020), நாட்டின் 4-ஆவது உயரிய விருதான பத்ம ஸ்ரீ (2020) ஆகியவை வழங்கி அவர் கௌரவிக்கப்பட்டார்.

## வரலாற்று சாதனையை நிகழ்த்தினார் இந்தியாவின் அர்ஜுன் எரிகைசி..!

- இந்தியாவின் அர்ஜுன் எரிகைசி ஃபிடே லைவ் ரேட்டிங்கில் 2,800 புள்ளிகளைக் கடந்து சாதனை படைத்துள்ளார்.
- இந்த சாதனையை நிகழ்த்தும் 2ஆவது இந்தியர் என்ற பெருமையைப் பெற்றுள்ளார். இதற்கு முன்பு தமிழகத்தின் விஸ்வநாதன் ஆனந்த் இந்த சாதனையை நிகழ்த்தியுள்ளார்.
- உலக அளவில் 16ஆவது வீரராக அர்ஜுன் எரிகைசி 2,800 புள்ளிகளைக் கடந்துள்ளார்.

## ஜப்பான் ஓபன்: ஜெங் கின்வென் சாம்பியன்

- ஜப்பான் ஓபன் மகளிர் டென்னிஸ் போட்டியில், சீனாவின் ஜெங் கின்வென் சாம்பியன் பட்டம் வென்றார்.
- நடப்பு சீசனில் தொடர்ந்து 3-ஆவது சாம்பியன் பட்டம் கைப்பற்றியிருக்கும் கின்வென், இந்த வெற்றியின் மூலம் ஆண்டு இறுதிப் போட்டியான டபிள்யூடிஏ ஃபைனல்ஸுக்கு முதல் முறையாகத் தகுதிபெற்றுள்ளார்.
- நடப்பு ஒலிம்பிக் சாம்பியனான கின்வென், 1 மணி நேரம் 52 நிமிடங்கள் போராடி, 2020 ஆஸ்திரேலிய ஓபன் சாம்பியனான சோபியா கெனினை வென்றார்.

## வியன்னா ஓபன்: ஜேக் டிரேப்பருக்கு கோப்பை

- ஆஸ்திரியாவில் நடைபெற்ற வியன்னா ஓபன் ஆடவர் டென்னிஸ் போட்டியில், பிரிட்டனின் ஜேக் டிரேப்பர் வாகை சூடினார்.
- ஆடவர் ஒற்றையர் இறுதிச்சுற்றில், ஜேக் டிரேப்பர் ரஷியாவின் காரென் கச்சனோவை தோற்கடித்தார்.
- இதன் மூலம் 'ஏடிபி 500' வகை போட்டிகளில் அவர் தனது முதல் சாம்பியன் கோப்பையைக் கைப்பற்றியிருக்கிறார்.
- ஒட்டுமொத்தமாக இது அவரின் 2-ஆவது ஏடிபி பட்டம்.

### சர்வதேச ஒலிம்பிக் கமிட்டியிடம் 2036-ம் ஆண்டு ஒலிம்பிக்கை நடத்த விருப்பம் தெரிவித்து கடிதம் வழங்கியது இந்தியா

- 2036-ம் ஆண்டு ஒலிம்பிக் மற்றும் பாராலிம்பிக் போட்டிகளை நடத்துவதற்கான விருப்பத்தை வெளிப்படுத்தும் 'விருப்பக் கடிதத்தை' சர்வதேச ஒலிம்பிக் கமிட்டியின் எதிர்கால போட்டியை நடத்தும் உரிமையை வழங்கும் கமிஷனிடம் இந்தியா சமர்ப்பித்துள்ளது.
- 2028-ஆம் ஆண்டு ஒலிம்பிக் நடைபெறும் இடம் - அமெரிக்காவின் லாஸ் ஏஞ்சல்ஸ் நகர்.
- 2032-ஆம் ஆண்டு ஒலிம்பிக் நடைபெறும் இடம் - ஆஸ்திரேலியாவின் பிரிஸ்பேன் நகர்.
- சர்வதேச ஒலிம்பிக் கமிட்டியின் தற்போதைய தலைவர் - தாமஸ் பாக் ஆவார்.
- நவீன ஒலிம்பிக் போட்டியை ஒருங்கிணைத்தவர்- பியரி டி கூபர்டின்(ஒலிம்பிக் போட்டியின் தந்தை).
- முதன் முதலில் ஒலிம்பிக் கொடியை வடிவமைத்தவர் — பியரி டி கூபர்டின்.

SIVARAJAVEL
IAS ACADEMY



# முக்கிய தினங்கள்

## தேசிய தன்னார்வ இரத்ததான தினம்: (அக்டோபர் 1)

- 1975- ஆம் ஆண்டு இந்திய இரத்த மாற்றம் மற்றும் நோய் எதிர்ப்பு சொசைட்டி சார்பில் அக்டோபர் 1ஆம் தேதி தேசிய இரத்ததான தினமாக அறிவிக்கப்பட்டது.
- கருப்பொருள்: 'ரத்த நன்கொடையின் 20-ம் ஆண்டு கொண்டாட்டம்: ரத்தக் கொடையாளர் அனைவருக்கும் நன்றிகள்'
- தமிழகத்தில் இதற்காக 107 அரசு ரத்த மையங்கள், 247 தனியார் ரத்த மையங்கள் செயல்படுகின்றன.
- இவற்றின் செயல்பாடுகளை கண்காணிக்க 'e-Rak-tKosh' என்ற வலைதளம் செயல்பாட்டில் உள்ளது.

## சர்வதேச முதியோர் தினம்: (அக்டோபர் 1 )

- ஒவ்வொரு வருடமும் அக்டோபர் 1- ஆம் தேதி சர்வதேச முதியோர் தினமாக கொண்டாடப்பட்டு வருகிறது.
- வியன்னா சர்வதேச முதியோருக்கான செயல் திட்டம்' என்ற அமைப்பின் முயற்சியால் 1982 ஆம் ஆண்டு உலக அரங்கில் முதல்முறையாக 'முதியோர் நலன்' குறித்து பேசப்பட்டது.
- அதை ஏற்றுகொண்ட ஐ.நா. அவை முதியோர் நலனை வலியுறுத்தும் விதமாக, டிசம்பர் 14, 1990 அன்று அக்டோபர் 1 ஆம் தேதியை சர்வதேச முதியோர் நாளாக அறிவித்தது.

## அன்னிபெசண்ட் அம்மையார் பிறந்த நாள்: (அக்டோபர் 1)

- அயர்லாந்து பெண்மணியான அன்னி பெசண்ட் அம்மையார் 1847 அக்டோபர் 1ல் பிறந்தார்.
- ஆங்கிலோ-இந்திய செயற்பாட்டாளரான அன்னி வுட் பெசண்ட் (அக்டோபர் 1, 1847 — செப்டம்பர் 20, 1933) என்பவர் பெண் விடுதலைக்காகப் போராடியவர், எழுத்தாளர் மற்றும் பேச்சாளர் ஆவார்.
- 1916இல் 'தன்னாட்சி இயக்கத்தை' பால கங்காதர திலகருடன் ஆரம்பித்து, நாடு முழுவதும் கிளைகளை உருவாக்கினார்.
- அதன் தலைமைப் பொறுப்பில் இருந்த அன்னி பெசன்ட், இந்தியா முழுவதும் ஏராளமான கூட்டங்களில் பேசி, ஆங்கிலேயருக்கு எதிராக மக்களை ஒன்றுதிரட்டினார்.
- 1917இல் கல்கத்தாவில் நடைபெற்ற மாநாட்டில் காங்கிரஸ் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார், அன்னி பெசன்ட்.
- இவர் இந்திய தேசிய காங்கிரசின் முதல் பெண் தலைவர் ஆவார்.
- பத்திரிக்கைகள்: காமன் வீல், நியூ இந்தியா

## வன உயிரின வார விழா: (அக்டோபர் 2 )

- ஆண்டுதோறும் அக்டோபர் 2 முதல் 8-ஆம் தேதி வரை வன உயிரின வார விழா கடைப்பிடிக்கப்படுகிறது.
- வனங்களில் வாழும் அனைத்து விலங்குகள் மற்றும் உயிரினங்களைப் பாதுகாக்க வேண்டும் என்ற குறிக்கோளுடன் 1952-ம் ஆண்டு முதல் இது அனுசரிக்கப்படுகிறது.

## உலக மார்பக புற்றுநோய் விழிப்புணர்வு மாதம்:

- ஒவ்வொரு ஆண்டும் அக்டோபர் மாதம் முழுவதும் உலக மார்பக புற்றுநோய் மாதமாக அனுசரிக்கப்படுகிறது.
- இம்பீரியல் கெமிக்கல் இண்டஸ்ட்ரீஸின் மருந்துப் பிரிவுடன் இணைந்து அமெரிக்கன் கேன்சர் சொசைட்டியால் முதன்முதலில் ஏற்பாடு செய்யப்பட்ட மார்பக புற்றுநோய் விழிப்புணர்வு மாதத்தின் தோற்றம் 1985 ஆம் ஆண்டிலிருந்து அறியப்படுகிறது.
- மார்பக புற்றுநோய் விழிப்புணர்வு மாதம் என்பது மார்பக புற்றுநோயின் விழிப்புணர்வுக்கான உலகளாவிய சுகாதார நிகழ்வு ஆகும்.
- பிங்க் ரிப்பன் மார்பக புற்றுநோய்

விழிப்புணர்வுக்கான உலகளாவிய சின்னம் ஆகும்.

## சர்வதேச அகிம்சை தினம் (அக்டோபர் 2)

- மகாத்மா காந்தியடிகளின் பிறந்த தினமான அக்டோபர் 2ஆம் தேதி, ஐ.நா., அமைப்பால் "சர்வதேச அகிம்சை தினமாக' அறிவிக்கப்பட்டு உலகம் முழுவதும் கடைபிடிக்கப்படுகிறது.
- அமைதி, சகிப்புத்தன்மை, சகோதரத்துவம், வன்முறையற்ற வாழ்க்கை போன்றவற்றின் முக்கியத்துவத்தை மக்களுக்கு உணர்த்துவதற்காக இத்தினம் கடைபிடிக்கப்படுகிறது.
- முதலாவது அகிம்சை தினம் 2007-ஆம் ஆண்டு கொண்டாடப்பட்டது.

## கர்ம வீரர் காமராஜரின் நினைவு நாள் (அக்டோபர் 2)

- தமிழக முன்னாள் முதல்வர் கர்மவீரர் காமராஜரின் 49-வது நினைவு நாள் 2024 அக்டோபர் 2ம் நாள் அனுசரிக்கப்படுகிறது.
- 1903 ஜூலை 15 இல் தமிழ்நாட்டின் பின்தங்கிய பகுதியில் எளிய குடும்பத்தில் பிறந்தவர் குமாரசாமி காமராஜர்.
- ஜாலியன் வாலாபாக் படுகொலை அவரது வாழ்க்கையில் திருப்பு முனையாக அமைந்தது.
- பின்னர் விடுதலைப் போராட்டத்தில் ஈடுபட தொடங்கினார்.
- 1936-இல் தமிழ்நாடு காங்கிரஸ் கட்சி செயலராகவும், 1937-இல் முதல் முறையாக சட்டப்பேரவைக்கு தேர்ந்தெடுக்கப்பட்டார்.
- 1940 முதல் 1954 வரை தமிழ்நாடு காங்கிரஸ் கட்சி தலைவராக செயல்பட்டார்.
- 1946-இல் மீண்டும் சட்டப்பேரவைக்கு தேர்ந்தெடுக்கப்பட்டார்.
- 1954 முதல் 1963 வரை தமிழக முதல்வராகவும், 1963 முதல் 1967 வரை அகில இந்திய காங்கிரஸ் கட்சித் தலைவராகவும் பொறுப்பு வகித்தார்.
- 1963 இல், 'காமராஜர் திட்டம்' — திட்டப்படி மூத்த காங்கிரஸ் தலைவர்கள் அமைச்சர் பதவிகளில் இருந்து விலகி கட்சி வளர்ச்சிப் பணிகளை மேற்கொள்ள வேண்டும் என்று பரிந்துரைத்தார்.
- இந்தியாவின் பிரதமரை இருமுறை தேர்ந்தெடுப்பதில் முக்கியப் பங்கு வகித்ததால் 'கிங் மேக்கர்' என அழைக்கப்பட்டார்.
- காந்தியடிகளின் பிறந்தநாளான அக்டோபர் 2-ஆம் நாளில் 1975-இல் காலமானார்.
- 1976 ஆம் ஆண்டு நாட்டின் மிக உயரிய விருதான பாரத ரத்னா விருது அவருக்கு இறப்புக்குப் பின் வழங்கப்பட்டது.

## லால் பகதூர் சாஸ்திரி (அக்டோபர் 2)

- லால் பகதூர் சாஸ்திரி 1904 ஆம் ஆண்டு அக்டோபர் 2 ஆம் தேதி உத்தரபிரதேசத்தில் வாரணாசிக்கு அருகில் உள்ள முகல்சராய் நகரில் பிறந்தார்.
- 1928 இல், அவர் இந்திய தேசிய காங்கிரஸின் தீவிர உறுப்பினரானார்.
- 1930 இல் உப்பு சத்தியாகிரகத்தில் பங்கேற்றார்.
- வெள்ளையனே வெளியேறு இயக்கம் மற்றும் தனிநபர் சத்தியாகிரகத்திலும் பங்கேற்றார்.
- 1951ல் அகில இந்திய தேசிய காங்கிரஸின் பொதுச் செயலாளராக நியமிக்கப்பட்டார்.
- சாஸ்திரிஜி 23 மே 1952 அன்று மத்திய அரசில் இரயில் அமைச்சராக அறிவிக்கப்பட்டார்.
- சமூகத்தின் நலிந்த பிரிவினருக்காக மூன்றாம் வகுப்பு ரயில் பெட்டி வகுப்பைத் தொடங்கினார்.
- 1956 - தமிழ்நாட்டில் 144 பேரைக் கொன்ற ஒன்றிரண்டு ரயில் விபத்துக்களுக்குப் பிறகு அவர் ராஜினாமா செய்தார்
- ஜவஹர்லால் நேரு இறப்பிற்குப் பின் 1964 இல் லால் பகதூர் சாஸ்திரி குடியரசுத் தலைவர் டாக்டர் சர்வபள்ளி ராதாகிருஷ்ணனின் கீழ் இந்தியக் குடியரசின் இரண்டாவது பிரதமரானார்.
- ஜனவரி 1965- விவசாய விலை ஆணையம் (APC) அமைக்கப்பட்டது.
- 1965ல் பாகிஸ்தான் இந்தியாவை ஆக்கிரமித்தபோது, பாதகமான சூழ்நிலையிலும் அந்த நடவடிக்கையை சிறப்பாக கையாண்டார்.
- சாஸ்திரிஜி இந்தியர்களை அணிதிரட்ட ஜெய் ஜவான் மற்றும் ஜெய் கிசான் என்ற முழக்கத்தை வழங்கினார்.
- 1966 இல் அவருக்கு மரணத்திற்குப் பின் பாரத ரத்னா விருது வழங்கப்பட்டது அதே ஆண்டில் அவர் இடம்பெற்ற அஞ்சல் தலை வெளியிடப்பட்டது.
- லால் பகதூர் சாஸ்திரி அமைதி மனிதர் என்றழைக்கப்படுகிறார்.

## உலக புன்னகை தினம் - (அக்டோபர் 4)

- உலக புன்னகை தினம் என்பது ஆண்டுதோறும் அக்டோபர் மாதத்தின் முதல் வெள்ளிக் கிழமை கொண்டாடப்படுகிறது.

- உலக புன்னகை தினம் 1999 முதல் அனுசரிக்கப்படுகிறது.
- உலக புன்னகை தினக் கருப்பொருள் 2024: "ஒரு கருணைச் செயலைச் செய்யுங்கள். ஒருவர் சிரிக்க உதவுங்கள்"!

## உலக விலங்குகள் தினம்:(அக்டோபர் 4)

- விலங்குகளை பாதுகாப்பது, அவை வேட்டையாடுவதை தடுப்பது பற்றி விழிப்புணர்வு ஏற்படுத்தும் விதமாக அக்டோபர் 4-இல் உலக விலங்குகள் தினம் கடைபிடிக்கப்படுகிறது.
- இத்தாலி நாட்டை சேர்ந்த இயற்கை ஆர்வலரும் விலங்குகளின் ஆராய்ச்சியாளருமான பிரான்சிஸ் அசிசி நினைவு நாளான அக்டோபர் 4-இல் இத்தினம் கடைபிடிக்கப்படுகிறது.
- முதன்முதலாக 1931-ஆம் ஆண்டு, இத்தாலியின் புளோரன்ஸ் நகரில்தான் வனவிலங்குகள் தினம் கடைபிடிக்கப்பட்டது.
- இத்தினத்தின் 2024-ஆம் ஆண்டின் கருப்பொருள்:The world is their home too.

## உலக விண்வெளி வாரம் (அக்டோபர் 4)

- அக்டோபர் 4 ஆம் தேதி முதல் - அக்டோபர் 10 ஆம் தேதி வரையிலான நாட்களை உலக விண்வெளி வாரமாக கொண்டாடப்படுகிறது.
- 2024 ம் ஆண்டின் கருப்பொருள்: "விண்வெளி மற்றும் காலநிலை மாற்றம்."

### வரலாறு

- 1957 ஆம் ஆண்டு, அக்டோபர் 4-ஆம் தேதி ஸ்புட்னிக் 1 (Sputnik 1) என்ற செயற்கைகோள் உலகின் முதன்முதலாக செலுத்தப்பட்ட செயற்கைகோளாகும்.
- 1967 இல் அக்டோபர் 10 ஆம் நாளில் புற விண்வெளி அமைதி உடன்படிக்கை செய்யப்பட்டு, உலக நாடுகளிடையே ஒப்பந்தம் கையெழுத்தானது.
- 1999 ஆம் ஆண்டு ஐ.நா., சபையால் அக்டோபர் 4-ஆம் தேதி மற்றும் 10-ஆம் தேதி இரு நாட்கள் (இரு நிகழ்வுகள்) இடைப்பட்ட நாட்கள், நினைவுகூரும் வகையில் உலக விண்வெளி வாரம் கொண்டாடப்படுமென அதிகாரபூர்வமாக அறிவிக்கப்பட்டது.

## உலக ஆசிரியர் தினம்: (அக்டோபர் 5)

- உலகம் முழுவதும் உள்ள அனைத்து ஆசிரியர்களையும் கொண்டாடும் வகையில் ஆண்டுதோறும் அக்டோபர் 5-ஆம் தேதி உலக ஆசிரியர் தினம் கொண்டாடப்படுகிறது.
- 2024-ஆம் ஆண்டின் கருப்பொருள்: ஆசிரியர்களின் குரல்களுக்கு மதிப்பளித்தல்: கல்விக்கான புதிய சமூக ஒப்பந்தத்தை நோக்கி.
- இத்தினம் 1994-ஆம் ஆண்டு முதல் ஐக்கிய நாடுகள் கல்வி, அறிவியல் மற்றும் கலாச்சார அமைப்பால் (UNESCO) கடைபிடிக்கப்பட்டு வருகிறது
- இந்தியாவில் ஆண்டுதோறும் செப்டம்பர் 5-ஆம் தேதி தேசிய அளவில் ஆசிரியர்கள் தினம் கொண்டாடப்படுகிறது.
- உலக ஆசிரியர் தினம் சர்வதேச தொழிலாளர் அமைப்பு (ILO), UNICEF மற்றும் Education International (EI) ஆகியவற்றுடன் இணைந்து கொண்டாடப்படுகிறது.

## இராமலிங்க அடிகளார் (அக்டோபர் 5)

- வள்ளலார் என்று அழைக்கப்படும் ஸ்ரீ ராமலிங்க சுவாமிகளின் 201வது பிறந்தநாள் இந்தியாவில் அக்டோபர் 5, 2024 அன்று கொண்டாடப்படுகிறது.
- ஸ்ரீ ராமலிங்க அடிகள் 19 ஆம் நூற்றாண்டில் தோன்றிய ஒரு முக்கிய தமிழ் கவிஞர் மற்றும் "ஞான சித்தர்கள்" பரம்பரையில் தோன்றியவராவர்.
- இவர் தமிழ்நாட்டில் உள்ள மருதூர் கிராமத்தில் பிறந்தவர்.
- வள்ளலார் சாதி அமைப்பை கடுமையாக எதிர்த்து, 1865 இல் 'சமரச வேத சன்மார்க்க சங்கம்' தொடங்கினார், பின்னர் 'சமரச சுத்த சன்மார்க்க சத்திய சங்கம்' என மறுபெயரிடப்பட்டது.
- 1867 ஆம் ஆண்டு தமிழ்நாட்டின் வடலூரில் 'சத்ய தர்ம சாலை' என்ற இலவச உணவு வசதியை நிறுவி, சாதி வேறுபாடுகள் இல்லாமல் அனைத்து மக்களுக்கும் சேவை செய்தார்.
- ஜனவரி, 1872ல், வள்ளலார் வடலூரில் 'சத்திய ஞான சபை' (உண்மை அறிவு மண்டபம்) திறந்தார்.
- அவர் பிறந்தநாளான அக்டோபர் ஐந்தாம் நாள் 2021 முதல் ஆண்டுதோறும் தமிழக அரசால் தனிப்பெருங்கருணை நாள் எனக் கடைப்பிடிக்கப்படுகிறது.

### படைப்புகள்:

- திருவருட்பா: அவரது ஆன்மீக நுண்ணறிவு மற்றும் அனுபவங்களை உள்ளடக்கிய கவிதைகளின் தொகுப்பு.
- மனுமுறை கண்ட வாசகம்
- ஜீவகாருண்ய ஒழுக்கம்

## விமானப்படை தினம்: (அக்டோபர் 8)

- இந்திய விமானப்படை கடந்த 1932-ம் ஆண்டு அக்டோபர் 8ம் தேதி தொடங்கப்பட்டது.
- இதைக் கொண்டாடும் வகையில், சென்னையில் அக்டோபர் 6ம் தேதி மிகப் பெரிய விமான வான் சாகச நிகழ்ச்சி நடைபெற்றது.
- ஆண்டுதோறும் இந்த வான் சாகச நிகழ்ச்சி டெல்லியில் மட்டுமே நடைபெற்று வந்தது.
- பின்னர் டெல்லிக்கு வெளியே சண்டிகரில் 2022ம் ஆண்டும், உத்தரப்பிரதேச மாநிலம் பிரயாக்ராஜ் நகரில் கடந்த ஆண்டும் நடைபெற்றது.
- மூன்றாவது ஆண்டாக சென்னையில் தற்போது நடைபெற்றது.
- இந்திய விமானப்படை தினம் 2024ற்கான கருப்பொருள்; "பாரதிய வாயு சேனா - சக்ஷம், சஷக்த், ஆத்மநிர்பர்"

## உலக பருத்தி தினம் (அக்டோபர் 7)

- உலக பருத்தி தினம்: அக்டோபர் 7
- 2024 ஆம் ஆண்டிற்கான பருத்தி தினத்தின் மையக் கருத்து;'நன்மைக்கான பருத்தி'.
- பருத்தி-4 நாடுகள் என்றழைக்கப்படும் ஆப்பிரிக்காவின் பெனின், பர்கினோ பாஷோ, சாட், மாலி நாடுகளின் வேண்டுகோளை ஏற்று உலக வர்த்தக அமைப்பு 2019 அக்டோபர் 7 - இல் இத்தினத்தை அறிவித்தது.

## தமிழகத்தில் முதன்முதலாக நீலகிரி வரையாடுகள் தினம்: (அக்டோபர் 7)

- வரையாடுகள் குறித்து ஆய்வுகள் மேற்கொண்டு பல்வேறு புத்தகங்களை எழுதிய வனவிலங்கு பாதுகாவலரான ஈ.ஆர்.சி. தாவீதாரின் பிறந்தநாளான அக்டோபர் 7, நீலகிரி வரையாடுகள் தினமாக கடைபிடிக்கபடுகிறது.
- 1963 ஆம் ஆண்டில், நீலகிரியில் உள்ள நீலகிரி வரையாடுகளின்
- முதல் கணக்கெடுப்பை அவர் நடத்தி அவற்றின் எண்ணிக்கை சுமார் 400 என்று மதிப்பிட்டார்.
- 1975 ஆம் ஆண்டில், மேற்குத் தொடர்ச்சி மலையில் உள்ள நீலகிரி தாற்றின் விரிவான கணக்கெடுப்பை நடத்திய அவர், அதன் எண்ணிக்கை சுமார் 2,200 என மதிப்பிட்டார்.
- கடந்த 2023-ம் ஆண்டு முதல் அக்டோபர் 7-ம் தேதி வனவிலங்கு பாதுகாவலரான ஈ.ஆர்.சி. தாவீதாரின் பிறந்தநாள் நீலகிரி வரையாடுகள் தினமாக கொண்டாடப்படுமென தமிழக அரசு அறிவித்தது.
- அதன்படி நடப்பாண்டு அக்டோபர் 7இல் முதன்முதலாக வரையாடுகள் தினம் கடைபிடிக்கப்பட்டது.
- தமிழகத்தின் மாநில விலங்கான வரையாடுகள் மேற்குத் தொடர்ச்சி மலையின் தென் மேற்கு பகுதியில் உள்ள ஓரிடவாழ் பாலூட்டியாகும்.
- வரையாடுகள், தமிழ்நாடு மற்றும் கேரளாவில் மட்டுமே காணப்படுகின்றன.
- தமிழகத்தில் ஆனைமலை, முதுமலை, களக்காடு-முண்டந்துறை, ஸ்ரீவில்லிபுத்தூர்-மேகமலை ஆகிய புலிகள் காப்பகங்கள், சிறுவாணி மலைகளில் அதிக எண்ணிக்கையில் வரையாடுகள் காணப்படுகின்றன.
- 'மலைப் பாதுகாவலர்கள்' என்று அழைக்கப்படும் வரையாடுகள், நீர்ப்பிடிப்பு பகுதிகளை மேம்படுத்துவதிலும், மனித குலத்தின் உயிர்வாழ்வுக்கான முக்கிய தனித்துவமான சோலை-புல்வெளி சுற்றுச்சூழலைப் பராமரிப்பதிலும் உதவுகின்றன.
- நீலகிரி வரையாடுகளை பாதுகாக்க 'நீலகிரி வரையாடுகள் திட்டம்' என்ற ஐந்தாண்டு திட்டத்தை தமிழக அரசு தொடங்கியுள்ளது.

## உலக அஞ்சல் தினம் (அக்டோபர் 9)

- உலக அஞ்சல் தினம் (World Post Day) ஒவ்வொரு ஆண்டும் அக்டோபர் 9ஆம் தேதி சர்வதேச அளவில் கொண்டாடப்படுகிறது.
- சுவிட்சர்லாந்தில் உள்ள பேர்ன் நகரில் 1874-ஆம் ஆண்டு அக்டோபர் 9-ஆம தேதி சர்வதேச அஞ்சல் ஒன்றியம் நிறுவப்பட்டது.
- இந்த நாளை நினைவு கூறும் விதமாக 1969-ஆம் ஆண்டு முதல் ஒவ்வொரு ஆண்டும் அக்டோபர் 9-ஆம் தேதி உலக அஞ்சல் தினமாக கொண்டாடப்படுகிறது.
- அஞ்சல் சேவையின் முக்கியத்துவத்தையும், மக்களின் அன்றாட வாழ்வில் அஞ்சல் துறையின் பங்களிப்பு பற்றியும் பொதுமக்களிடம் எடுத்துரைப்பது இந்த நாளின் நோக்கமாகும்.
- உலக அஞ்சல் தினம் 2024 ஆம் ஆண்டிற்க்கான கருப்பொருள் ; "150 years of enabling communication and empowering peoples across nations" என்பதாகும்.
- உலக அளவில் அதிக எண்ணிக்கையில் தபால் நிலையங்களை கொண்ட நாடு இந்தியா ஆகும்.
- 1764-ஆம் ஆண்டு இந்திய அஞ்சல் துறை தொடங்கப்பட்டது.
- இந்தியா முழுவதும் 23 மண்டலங்களாக பிரிக்கப்பட்டுள்ள நிலையில், இதில் 89 சதவீத தபால் நிலையங்கள் கிராமங்களில் உள்ளன.

## உலக மனநல தினம்

- உலக மனநல தினம் 1992 ஆம் ஆண்டில் மனநலத்திற்கான உலக கூட்டமைப்பால் முதன் முதலில் அக்டோபர் 10ஆம் நாள் கடைபிடிக்கப்பட்டது. உலகெங்கிலும் உள்ள சில நாடுகளில், உலக மனநல தினம் மனநோய் விழிப்புணர்வு வாரத்தின் ஒரு பகுதியாகும்.
- 2024 ஆம் ஆண்டுக்கான கருப்பொருள் -பணியிடத்தில் மனநலம்

## உலக பார்வை தினம் 2024 (அக்டோபர் 10)

- நமது கண்கள் மற்றும் பார்வை பாதுகாப்பின் முக்கியத்துவத்தை எடுத்துரைக்கவும் பார்வைக் குறைபாடு மற்றும் பார்வை இழப்பு குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தவும் ஒவ்வொரு ஆண்டும் அக்டோபர் மாதத்தின் இரண்டாவது வியாழன் (அக்டோபர் 10, 2024) உலகப் பார்வை தினமாக அனுசரிக்கப்படுகிறது.
- பார்வை குறைபாடு மற்றும் பார்வை இழப்பு பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்த, உலக சுகாதார அமைப்பு (WHO) மற்றும் சர்வதேச குருட்டுத்தன்மை தடுப்பு நிறுவனம் (IAPB) ஆகியவற்றால் 1998ல் உலக பார்வை தினம் (World Sight Day) நிறுவப்பட்டது.
- 2024ன் கருப்பொருள்: 'குழந்தைகளே, உங்கள் கண்களை நேசிக்கவும்'
- SPECS 2030: இந்த முறை WHO, குழந்தைகளின் கண் ஆரோக்கியத்தில் கவனத்தை செலுத்தியுள்ளது.
- கண் சம்பந்தப்பட்ட சேவைகள் அனைத்தும் குழந்தைகள் அணுகக்கூடியதாகவும், கிடைக்கக்கூடியதாகவும் மற்றும் மலிவு விலையில் கிடைப்பதை நோக்கமாக கொண்டுள்ளது.

## சர்வதேச பெண் குழந்தை தினம் 2024 (அக்டோபர் 11)

- பெண்கள் எதிர்கொள்ளும் சவால்களை முன்னிலைப்படுத்தவும் கவனத்தை ஈர்க்கவும் ஆண்டுதோறும் அக்டோபர் 11 ஆம் தேதி சர்வதேச பெண் குழந்தை தினம் கொண்டாடப்படுகிறது.
- பெண் குழந்தைகளுக்கான சர்வதேச தினம் (IDG) ஆண்டுதோறும் அக்டோபர் 11 அன்று அனுசரிக்கப்படுகிறது.
- பெண்களின் உரிமைகளை அங்கீகரிப்பது என்ற கருத்து 1995 இல் சீனாவின் பெய்ஜிங்கில் நடந்த உலக பெண்கள் மாநாட்டின் போது வடிவம் பெறத் தொடங்கியது.
- பின்னர், டிசம்பர் 19, 2011 அன்று, ஐக்கிய நாடுகளின் பொதுச் சபை (UNGA) அக்டோபர் 11 ஆம் தேதியை சர்வதேச பெண் குழந்தை தினமாக அறிவிக்க 66/170 தீர்மானத்தை ஏற்றுக்கொண்டது.
- 2012 முதல், பெண் குழந்தைகளுக்கான சர்வதேச தினம் ஒவ்வொரு ஆண்டும் கொண்டாடப்படுகிறது.
- இதன் முக்கிய நோக்கம் பெண்களுக்கு அதிகாரம் அளிப்பதும், அவர்களின் உரிமைகளைப் பெற உதவுவதும் ஆகும்.
- உலகெங்கிலும் உள்ள சிறுமிகளுக்கு எதிரான பாலின அசாதாரணங்களை அகற்றுவது பற்றிய விழிப்புணர்வை பரப்புகிறது.
- 2024-ம் ஆண்டுக்கான கருப்பொருள்: 'பெண்களின் எதிர்கால பார்வை.'

## சங்கரலிங்கனாரின் நினைவு தினம் (அக்டோபர் 13)

- மெட்ராஸ் மாகாணம் என்று அழைக்கப்பட்ட தமிழர்களின் நிலப்பரப்பை "தமிழ்நாடு" என்று பெயர் மாற்றம் செய்ய வலியுறுத்தி 76 நாட்கள் உண்ணாவிரதம் இருந்து உயிர் நீத்த தியாகி சங்கரலிங்கனாரின் நினைவு தினம் அக்டோபர் 13-ல் அனுசரிக்கப்படுகிறது. தமிழர்களின் நிலப்பரப்பை தமிழ்நாடு எனப் பெயர் மாற்றக்கோரி 1956 ஜூலை மாதம் 27-ந்தேதி விருதுநகர் சூலக்கரைமேட்டில் தனிநபராக உண்ணாவிரதம் தொடங்கினார்.
- தமிழுக்காகவும் தமிழ்மேல் கொண்ட தனது கொள்கைக்காகவும் உண்ணாவிரதப் போராட்டம் தொடங்கி 76-வது நாளான 1956 அக்டோபர் 13ம் தேதி தியாகி சங்கரலிங்கனார் உயிர் துறந்தார்.
- 1967-ம் ஆண்டு அறிஞர் அண்ணா முதல்-அமைச்சரானதும், 1968 ஜூலை 18-ந் தேதி தமிழ்நாடு பெயர் மாற்ற தீர்மானம் ஒரு மனதாக நிறைவேற்றப்பட்டது.
- 1968 நவம்பர் மாதம் தமிழ்நாடு பெயர் மாற்ற மசோதா பாராளுமன்றத்தில் நிறைவேறியது. 1968 டிசம்பர் 1-ந்தேதி தமிழ்நாடு பெயர் மாற்ற விழாவாக கொண்டாடப்பட்டது
- 1969 ஜனவரி 14-ம் தேதி பொங்கல் முதல் நாள் அதிகாரபூர்வமாக மெட்ராஸ் மாகாணம் தமிழ்நாடு ஆனது.
- சங்கரலிங்கனாரின் நினைவை போற்றும் வகையில் தமிழக அரசால் விருதுநகர் கல்லூரி சாலையில் நகராட்சி பூங்கா அருகில் அவருக்கு மணிமண்டபம் கட்டப்பட்டுள்ளது.

## சர்வதேச பேரிடர் அபாய குறைப்பு தினம் (அக்டோபர் 13)

- உலகளாவிய பேரிடர் விழிப்புணர்வு மற்றும் பேரிடர் குறைப்பு கலாச்சாரத்தை

ஊக்குவிப்பதற்காக, பேரிடர் அபாய குறைப்புக்கான சர்வதேச தினம் ஐக்கிய நாடுகள் பொதுச் சபையால் 1989-இல் தொடங்கப்பட்டது.

- அதன்படி ஒவ்வொரு ஆண்டும் அக்டோபர் 13-ஆம் தேதி சர்வதேச பேரிடர் அபாய குறைப்பு தினமாக கொண்டாடப்படுகிறது.
- பேரிடர் மேலாண்மையின் அடிப்படையில் தடுப்பு நடவடிக்கைகளில், மக்கள் எவ்வாறு பங்களிக்க வேண்டும் என்ற விழிப்புணர்வை ஏற்படுத்துவதே பேரிடர் அபாய குறைப்பு தினத்தின் நோக்கமாகும்.

## உலக தர நிர்ணய தினம் (அக்டோபர் 14)

- ஒவ்வொரு ஆண்டும் அக்டோபர் 14 அன்று, உலகம் முழுவதும் தர நிர்ணய தினம்(World Standards day) கொண்டாடப்படுகிறது.
- இது தர நிர்ணய பணியில் ஈடுபட்டுள்ள ஆயிரக்கணக்கான நிபுணர்களின் கூட்டு முயற்சிகளை அங்கீகரிப்பதற்கும் எதிர்கால பாதையில் பயணிப்பதற்கும் ஆகும்
- 2024 ஆம் ஆண்டின் உலக தர நிர்ணய தினத்தின் கருப்பொருள் ; "Our Shared Vision for a Better World: Standards for the Changing Climate"

## அப்துல் கலாம் 93-வது பிறந்த தினம் (அக்டோபர் 15)

- இந்தியாவின் 11ஆவது குடியரசுத் தலைவரான அப்துல் கலாமின் 93-வது பிறந்த தினம் 2024 அக்டோபர் 15-ம் தேதி நாடு முழுவதும் கொண்டாடப்படுகிறது.
- இந்தியாவின் புகழ்பெற்ற விஞ்ஞானிகளில் ஒருவரும், முன்னாள் குடியரசுத் தலைவருமான டாக்டர் அவுல் பகீர் ஜைனுலாப்தீன் அப்துல் கலாமின் பிறந்தநாளை நினைவுகூரும் வகையில் ஒவ்வொரு ஆண்டும் அக்டோபர் 15-ஆம் தேதி 'உலக மாணவர் தினம்' கொண்டாடப்படுகிறது
- டாக்டர். ஏ.பி.ஜே.அப்துல் கலாம் அக்டோபர் 15, 1931-இல், இந்தியாவின், தமிழ்நாடு மாநிலத்தில் உள்ள ராமேஸ்வரத்தில் பிறந்தார்.
- இந்தியாவின் முதல் செயற்கைக்கோளான ஆர்யபட்டாவை வெற்றிகரமாக விண்ணில் செலுத்துவதில் முக்கியப் பங்கு வகித்தார். அவரது அர்ப்பணிப்பு மற்றும் நிபுணத்துவம் அவருக்கு 'இந்தியாவின் ஏவுகணை நாயகன்' என்ற புனைப்பெயரைப் பெற்றுத் தந்தது.
- டாக்டர். கலாம் 2002 முதல் 2007 வரை இந்தியாவின் 11-ஆவது ஜனாதிபதியாக பணியாற்றினார்.
- ஒன்றிய அரசு இவருக்கு 1981 ஆம் ஆண்டு பத்ம பூஷண் விருது , 1990 ஆம் ஆண்டு பத்ம விபூஷண் விருது மற்றும் 1997 ஆம் ஆண்டு இந்தியாவின் உயரிய விருதான "பாரத ரத்னா" விருது ஆகியவற்றை வழங்கி சிறப்பித்துள்ளது
- டாக்டர். கலாம் அக்னிச் சிறகுகள், இந்தியா 2020, ஒளிரும் தீப்பொறிகள், மிஷன் இந்தியா, திருப்புமுனைகள்: சவால்களுக்கு இடையே ஒரு பயணம், எனது பயணம், போன்ற புத்தகங்களை எழுதியுள்ளார்.

## உலக உணவு தினம் (அக்டோபர் 16)

- உலக உணவு தினம் (World Food Day - WFD) என்பது ஒவ்வொரு ஆண்டும் அக்டோபர் 16 அன்று உலகம் முழுவதும் கொண்டாடப்படும் ஒரு சர்வதேச நாள் ஆகும்.
- 1979 ஆம் ஆண்டு உணவு மற்றும் வேளாண்மை அமைப்பின் (FAO) 20வது பொது மாநாட்டில் FAO இன் உறுப்பு நாடுகளால் உலக உணவு தினம் கடைபிடிக்கப்பட்டது.
- உலகம் முழுவதும் உள்ள உணவுப் பற்றாக்குறை, ஊட்டச்சத்து குறைபாடு மற்றும் பசியால் அவதிப்படும் மக்கள் பற்றி விழிப்புணர்வை ஏற்படுத்துவதை நோக்கமாக கொண்டுள்ளது.
- 2024 உலக உணவு தினத்திற்கான கருப்பொருள்; சிறந்த வாழ்க்கை மற்றும் சிறந்த எதிர்காலத்திற்கான உணவுகளுக்கான உரிமை.

## சுதந்திர போராட்ட வீரர் வீரபாண்டிய கட்டபொம்மன் நினைவு தினம் (அக்டோபர் 15)

- சுதந்திர போராட்ட வீரர் வீரபாண்டிய கட்டபொம்மனின் 225-வது நினைவு நாள் 2024, அக்டோபர் 16 அன்று அனுசரிக்கப்பட்டது.
- 1760 ஆம் ஆண்டு ஜனவரி 3 ஆம் தேதி ஆறுமுகத்தம்மாள், ஜெக வீரபாண்டிய கட்டபொம்முவிற்கு மகனாக பிறந்தார்,
- தந்தைக்கு பிறகு தனது முப்பதாவது வயதில் பிப்ரவரி 2 - ம் தேதி 1790 ஆண்டு 47-வது, பாளையக்காரராக பொறுப்பேற்றார் வீரபாண்டிய கட்டபொம்மன்.
- ஆங்கிலேயர்களுக்கு கப்பம் கட்ட மறுத்தார் வீரபாண்டிய கட்டபொம்மன் இவரின் வீரம் சுற்றியிருந்த அனைத்து மன்னர்களுக்கும் தெரியவர, ஆங்கிலேயரை எதிர்க்கும் நம்பிக்கை அதிகரித்தது.
- கட்டபொம்மன், அக்டோபர் 16 1799 ஆம் ஆண்டு ஆங்கிலேய தளபதி பேனர்மேன் உத்தரவின் படி கயத்தாற்றில் தூக்கிலிடப்பட்டார்..
- 1974 ல், தமிழக அரசு அவரது நினைவாக பாஞ்சாலங்குறிச்சியில் கட்டபொம்மனின் புராதன கோட்டை அமைந்திருந்த இடத்தில் ஒரு புதிய கோட்டை ஒன்றை கட்டியது.

- கோட்டையில்உள்ள பிரதான மண்டபம் முழுவதும் அவரது வீரச்செயல்களையும், வாழ்க்கை வரலாற்றை சித்தரிக்கும் வண்ணமாக, சுவர்களில் அழகான ஓவியங்கள் இடம் பெற்றிருக்கிறது .
- அவரது வீரத்தை போற்றும் விதமாகவும், நினைவுக் கூறும் விதமாகவும் தமிழ்நாட்டில் உள்ள வெலிங்டனில் ஒரு சிலை வைக்கப்பட்டிருக்கிறது.
- கட்டபொம்மன் அவர்களை கௌரவிக்கும் விதமாக, அவர் தூக்கிலிடப்பட்டு இருநூறாவது ஆண்டு விழாவின் நினைவாக அக்டோபர் 16, 1999 ஆம் ஆண்டில், இந்திய அரசு ஒரு தபால் தலையை வெளியிட்டது.
- இந்தியகடற்படையின் முதன்மையான தகவல் தொடர்பு இணைப்பு மையமாகக் கருதப்படும் தூத்துக்குடி மாவட்டத்தின் விஜயநாராயணபுரத்தில் அமைந்துள்ள இந்திய கடற்படைதளத்திற்கு ஐஎன்எஸ் கட்டபொம்மன்' என்று பெயரிடப்பட்டது.
- தூத்துக்குடி மாவட்ட நிர்வாகம் அவரது ஆண்டுவிழாவை, பாஞ்சாலங்குறிச்சியில் ஆண்டுதோறும் `வீரபாண்டிய கட்டபொம்மன் விழாவாக' மிக சிறப்பாக கொண்டாடுகிறது.

## தேசிய பாதுகாப்புப் படை உதயமான தினம்: (அக்டோபர் 16)

- 1984 ஆம் ஆண்டு NSG நிறுவப்பட்டதை நினைவுகூரும் வகையில் ஒவ்வொரு ஆண்டும் அக்டோபர் 16 ஆம் தேதி தேசிய பாதுகாப்புப் படை உதய நாள் கொண்டாடப்படுகிறது.
- NSG (National Security Guard) என்பது இந்தியாவில் பயங்கரவாத தாக்குதல்கள் மற்றும் பிற முக்கிய பாதுகாப்பு அச்சுறுத்தல்களுக்கு பதிலடி கொடுக்கும் ஒரு சிறப்பு பயங்கரவாத எதிர்ப்பு படையாகும்.

### உருவாக்கம்

- NSG தேசிய பாதுகாப்பு படைச் சட்டம், 1986ன் கீழ் உருவாக்கப்பட்டது.
- இது உள்துறை அமைச்சகத்தின் கீழ் உள்ள ஒரு கூட்டாட்சி தற்செயல் படையாகும்.
- தலைமையகம் - மனேசர், ஹரியானா.
- இது இந்தியா முழுவதும் ஆறு பிராந்திய தலைமையகங்களைக் கொண்டுள்ளது.

## தேசிய கற்றல் வாரம்: (அக்டோபர் 19)

- அரசு ஊழியர்கள் மற்றும் அரசு நிறுவனங்களின் திறன் மேம்பாட்டிற்கு புதிய உத்வேகம் அளிக்கும் வகையில் 'கர்மயோகி சப்தா' தேசிய கற்றல் வாரத்தை பிரதமர் மோடி (அக். 19) தொடங்கிவைத்தார்.
- மிஷன் கர்மயோகி அல்லது குடிமைப் பணிகள் திறன் கட்டமைப்புக்கான தேசிய திட்டம் கடந்த செப்டம்பர் 2020-ஆம் அண்டு தொடங்கப்பட்டது. அதன் பின்னர் கணிசமாக முன்னேற்றம் கண்ட இத்திட்டம், உலகளாவிய தரத்துக்கு அரசு ஊழியர்களின் திறனை மேம்படுத்தி வருகிறது.
- இத்திட்டத்தின் 'கர்மயோகி சப்தா' தேசிய கற்றல் வாரத்தை பிரதமர் மோடி தொடங்கிவைத்தார்.

## இந்திய காவல்துறை நினைவு தினம் (அக்டோபர் 21)

- ஒவ்வொரு ஆண்டும், இந்திய மக்கள் அக்டோபர் 21 ஆம் தேதி நாட்டிற்காக தங்கள் உயிரைக் கொடுத்த காவலர்களை கௌரவிக்கும் வகையில் காவல்துறை நினைவு தினமாக கொண்டாடுகிறார்கள்.
- 1959ஆம் ஆண்டு இதே நாளில் சீனாவின் தாக்குதலில் உயிரிழந்த பத்து சிஆர்பிஎஃப் காவலர்களை நினைவுகூரும் நாள்.
- இந்திய காவல்துறை நினைவு தினம் 2024-ம் ஆண்டுக்கான கருப்பொருள்: "துணிச்சலுக்கு மதிப்பளித்தல், அமைதியை நிலைநாட்டுதல்" என்பதாகும்.

## மோல் தினம் : அக்டோபர் 23

- ஒவ்வொரு ஆண்டும் அக்டோபர் 23 ஆம் தேதி காலை 6:02 முதல் மாலை 6:02 வரை அவோகாட்ரோஸ் எண் (6.02 x 1023) எனப்படும் வேதியியலின் அளவீட்டு அலகு நினைவாக மோல் தினம் கொண்டாடப்படுகிறது.
- மோரிசு ஓலெர் என்ற விஸ்கொன்சின் மாநில வேதியியல் ஆசிரியர் 1991 மே 15 ஆம் நாள் தேசிய மோல் நாள் நிறுவனத்தை (National Mole Day Foundation NMDF) ஆரம்பித்தார்.

## முதல் ஊழல் தடுப்பு விழிப்புணர்வு: (அக்டோபர் 28)

- இந்தியாவின் இரும்பு மனிதர் என அழைக்கப்படும் மறைந்த சர்தார் வல்லபாய் பட்டேலின் பிறந்தநாளான அக்டோபர் 31-ஆம் தேதியை முன்னிட்டு, அந்த வாரத்தை ஒவ்வொரு ஆண்டும் ஊழல் தடுப்பு விழிப்புணர்வு வாரமாக மத்திய ஊழல் தடுப்பு ஆணையம் அனுசரித்து வருகிறது.
- இந்த ஆண்டில் 'நாட்டின் வளர்ச்சிக்கான ஒருங்கிணைந்த கலாச்சாரம் என்ற கருப்பொருளில், அக்டோபர் 28 முதல் நவம்பர்

3-ஆம் தேதி வரை ஊழல் தடுப்பு விழிப்புணர்வு வாரம் கடைபிடிக்கப்பட்டது.

## உலக போலியோ தினம்: (அக்டோபர் 24)

- 1955-இல் போலியோ தடுப்பு மருந்தை உருவாக்கிய முதல் குழுவை வழிநடத்திய, டாக்டர் ஜோனாஸ் சால்க்கின் நினைவாக உலக போலியோ தினம் அக்டோபர் 24 ஆம் தேதி கொண்டாடப்படுகிறது.
- இந்தியா 2014 இல் உலக சுகாதார அமைப்பின் (WHO) போலியோ இல்லாத சான்றிதழைப் பெற்றுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது
- 2024ஆம் ஆண்டு உலக போலியோ தினத்தின் கருப்பொருள் ஒவ்வொரு குழந்தையையும் சென்றடைவதற்கான உலகளாவிய பணி."

## ஐக்கிய நாடுகள் தினம் :(அக்டோபர் 24)

- ஐக்கிய நாடுகள் தினம், 1948-ம் ஆண்டு முதல் ஒவ்வொரு ஆண்டும் அக்டோபர் 24 அன்று கொண்டாடப்படுகிறது.
- ஐக்கிய நாடுகள் சாசனம் 1945 இல் நடைமுறைக்கு வந்ததன் ஆண்டு நிறைவை ஐக்கிய நாடுகள் கூட்டமைப்பு தினம் குறிக்கிறது.
- உலக அமைதி மற்றும் சமத்துவத்தை நோக்கிச் செயல்பட்டு வரும் ஒரு உலகளாவிய நிறுவனம் ஐக்கிய நாடுகள் கூட்டமைப்பு ஆகும்.
- ஐக்கிய நாடுகள் சபை அதிகாரப்பூர்வமாக 24 அக்டோபர், 1945 அன்று நடைமுறைக்கு வந்தது. "ஐக்கிய நாடுகள்" என்ற பெயர் அமெரிக்க ஜனாதிபதி பிராங்க்ளின் டி. ரூஸ்வெல்ட்டால் உருவாக்கப்பட்டது.
- 1971 ஆம் ஆண்டில், ஐக்கிய நாடுகளின் பொதுச் சபை அந்த நாளை பொது விடுமுறை தினமாக உறுப்பு நாடுகளால் அனுசரிக்க பரிந்துரைக்கப்பட்டது.
- இந்த சாசனம் 1945 ஜூன் 26 அன்று 50 நாடுகளின் பிரதிநிதிகளால் கையெழுத்திடப்பட்டது.
- மாநாட்டில் பிரதிநிதித்துவம் செய்யப்படாத போலந்து, பின்னர் கையெழுத்திட்டு உறுப்பு நாடுகளின் எண்ணிக்கை 51 ஆக மாறியது. தற்போது 193 உறுப்பு நாடுகள் ஐக்கிய நாடுகள் சபையில் இருக்கின்றன.

## சர்வதேச கலைஞர்கள் தினம் (அக்டோபர் 25)

- கலைஞர்களையும் அவர்களின் அனைத்து பங்களிப்புகளையும் கௌரவிக்கும் வகையில் சர்வதேச கலைஞர்கள் தினம் அக்டோபர் 25ல் கொண்டாடப்படுகிறது.
- ஓவியர், சிற்பி, கவிஞர் மற்றும் நாடக ஆசிரியர் என பன்முகத் திறமை கொண்ட ஸ்பானிஷ் கலைஞரான பாப்லோ பிக்காசோவைக் நினைவு கூறும் வகையில் அவரது பிறந்தநாள் சர்வதேச கலைஞர்கள் தினம் என கொண்டாடப்படுகிறது.

## ஜதீந்திரநாத் தாஸ் பிறந்த தினம் (அக்டோபர் 27)

- மேற்கு வங்கத்தை சேர்ந்த புரட்சிகர சுதந்திரப் போராட்ட வீரர் ஜதீந்திரநாத் தாஸ்,1904 அக்டோபர் 27-ஆம் தேதி கொல்கத்தாவில் பிறந்தார்.
- 1921 ஆம் ஆண்டு அண்ணல் காந்தியாரின் ஒத்துழையாமை இயக்கத்தில் பங்கேற்றார்.
- சந்திர சேகர் ஆசாத், சுக்தேவ் தாபர், சசீந்திரநாத் ஆகியோர் தலைமையில் 'ஹிந்துஸ்தான் குடியரசுக் கழகம்' தொடங்கப்பட்டபோது அதை வலுப்படுத்த தாஸ் முக்கியப் பங்காற்றினார்.
- பகத்சிங்கின் நெருங்கிய நண்பர்களில் ஒருவர் ஜதீந்திரநாத் தாஸ்.
- 1928-இல் கொல்கத்தாவில் இருந்தபோது காங்கிரஸ் கட்சியை வலுப்படுத்த நேதாஜியுடன் இணைந்தார்.
- 1929 ஜூன் 14-ஆம் தேதி தனது புரட்சிகர நடவடிக்கைகளுக்காகக் கைது செய்யப்பட்ட இவர் இலாகூர் சிறையில் அடைக்கப்பட்டார்.
- லாகூர் சிறையில் இந்திய அரசியல் கைதிகளுக்கும் ஐரோப்பாவிலிருந்து வந்தவர்களுக்கும் சம உரிமை கோரி தாஸ், பகத் சிங் உள்ளிட்ட சுதந்திரப் போராட்ட வீரர்கள் உண்ணாவிரதப் போராட்டத்தைத் தொடங்கினர்.
- 63 நாட்கள் தொடர் உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்ட தாஸ் 1929 செப்டம்பர் 13 ஆம் தேதி தனது 24 வயதில் உயிர் நீத்தார்.
- இவரின் ஐம்பதாம் ஆண்டு நினைவு நாளான 1979 செப்டம்பர் 13 ஆம் நாளிலில் இந்திய அரசு இவரது உருவம் பொறித்த அஞ்சல் தலையொன்றை வெளியிட்டது.

## இந்திய ராணுவத்தின் காலாட்படை தினம் (அக்டோபர் 27)

- 1947ஆம் ஆண்டு அக்டோபர் 27ஆம் தேதி காலாட் படையினர் ஜம்மு - காஷ்மீர் ஸ்ரீநகர் விமானப் படை தளத்தில் எதிரிகளுடன் போரிட்டு காஷ்மீர் பள்ளத்தாக்கை மீட்டனர்.
- காலாட் படையின் இந்த வீரச் செயலைப் போற்றும் வகையில், ஒவ்வொரு ஆண்டும் அக்டோபர் 27ஆம் தேதி இந்திய ராணுவத்தின் சார்பில், காலாட்படை தினம் கொண்டாடப்படுகிறது.

- இந்தாண்டு (2024) 78-வது காலாட்படை தினம் கொண்டாடப்படுகிறது.

## ஒலி ஒளிப் பாரம்பரியத்திற்கான உலக தினம் (அக்டோபர் 27)

- ஒவ்வொரு ஆண்டும் அக்டோபர் 27- ஆம் தேதி, ஒலி ஒளிப் பாரம்பரியத்திற்கான உலக தினம்(World Day for Audiovisual Heritage) கடைபிடிக்கப்படுகிறது.
- பதிவு செய்யப்பட்ட ஒலி மற்றும் ஒளி ஆவணங்களின் முக்கியத்துவம் மற்றும் அதனை பாதுகாத்தலில் உள்ள சவால்கள் குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக இந்த நாள் யுனெஸ்கோ (UNESCO) அமைப்பினால் 2005-ஆம் ஆண்டு முதல் கடைபிடிக்கப்பட்டு வருகிறது.

## சர்வதேச அனிமேஷன் தினம் (அக்டோபர் 28)

- ஒவ்வொரு ஆண்டும் அக்டோபர் 28-ஆம் தேதி சர்வதேச அனிமேஷன் தினமாக கொண்டாடப்படுகிறது.
- அனிமேஷன் தொழில்நுட்பத்தில் உருவாகும் திரைப்படங்கள் மற்றும் இத்துறையில் பணியாற்றும் ஊழியர்களை ஊக்குவிக்கும் விதமாக சர்வதேச அனிமேஷன் தினம் கொண்டாடப்படுகிறது.
- அக்டோபர் 28,1892 அன்று பிரான்சின் சார்லெஸ் எமிலி ரெனாட் என்பவர் முதன் முதலில் திரையரங்கு ஒன்றில் அனிமேஷன் திரைப்படத்தை திரையிட்டதை நினைவு கூறும் விதமாக இந்த சர்வதேச அனிமேஷன் தினம் அமைந்துள்ளது.
- யுனெஸ்கோவின் ஒரு அங்கமாக திகழும் சர்வதேச அனிமேஷன் திரைப்பட சங்கம், 2002-ஆம் ஆண்டில் முதன் முதலாக இந்நாளை அறிமுகப்படுத்தியது.

## NDMA உருவான நாள் - அக்டோபர் 28

- தேசிய பேரிடர் மேலாண்மை ஆணையம், அக்டோபர் 28, 2024 அன்று NDMA-வின் 20வது உருவாக்கத் தொடக்க விழாவைக் கொண்டாடியது.

### தேசிய பேரிடர் மேலாண்மை ஆணையம்

- இது பேரிடர் மேலாண்மை சட்டம், 2005 மூலம் நிறுவப்பட்ட இந்தியாவில் பேரிடர் மேலாண்மைக்கான உச்ச சட்டப்பூர்வ அமைப்பாகும்.
- இந்தியாவில் பேரிடர் மேலாண்மைக்கு ஒரு முழுமையான மற்றும் ஒருங்கிணைந்த அணுகுமுறையை முன்னெடுத்துச் செயல்படுத்த, பிரதமர் தலைமையிலான NDMA மற்றும் அந்தந்த முதல்வர்கள் தலைமையிலான மாநில பேரிடர் மேலாண்மை ஆணையங்கள் (SDMAs) உருவாக்கப்படுவதைச் சட்டம் நோக்கமாகக் கொண்டுள்ளது.

### நிறுவன அமைப்பு

- பிரதமர் NDMA வின் அதிகாரபூர்வ தலைவராக உள்ளார்.
- கேபினட் அமைச்சர் - துணைத் தலைவர்.
- 8 இணை அமைச்சர்கள் உறுப்பினர்களாக உள்ளனர்.

## இந்திய அணுசக்தி துறையின் தந்தை ‘ஹோமி பாபா’ பிறந்த தினம் - (அக்டோபர் 30)

- அக்டோபர் 30,1909-இல் ஹோமி ஜஹாங்கீர் பாபா மும்பையில் பிறந்தார்.
- 1933-இல் அணு விஞ்ஞானத்தில் முனைவர் பட்டம் பெற்றார்.
- 1939-இல் இந்தியா திரும்பிய ஹோமி பாபா, பெங்களூருவில் உள்ள இந்திய அறிவியல் கழகத்தில், சர்.சி.வி. ராமனின் வழிகாட்டுதலில், பேராசியராக பணியாற்றினார். அங்கு காஸ்மிக் கதிர்களுக்கான ஆய்வுக் கூடத்தை நிறுவினார்.
- 1945-இல் மும்பையில் அடிப்படை ஆராய்ச்சிகளுக்கான டாடா நிறுவனத்தை (Tata Institute of Fundamental Research) கட்டமைத்தார்.
- இந்திய விடுதலைக்கு பின், 1948-இல் இந்திய அரசின் அணுசக்தி ஆணையத்தை உருவாக்கி, அதன் தலைவராக சிறப்பாக பணியாற்றினார்.
- 1954-இல் இந்தியாவின் முதல் அணுசக்தி ஆராய்ச்சி திட்டத்தை டிராம்பேயில் தொடங்கினார். அவரின் மறைவுக்கு பின்னர், அது பாபா அணுசக்தி ஆராய்ச்சி மையம் (BARC) என்று பெயர் மாற்றம் செய்யப்பட்டது.
- ஜனவரி 24, 1966-இல் ஐரோப்பாவிற்கு பயணம் செய்த போது, விமான விபத்தில் காலமானார்.

## உலக சிக்கன நாள் (அக்டோபர் 31)

- உலக சிக்கன தினம் ஆண்டுதோறும் அக்டோபர் 31 ஆம் தேதி உலகம் முழுவதும் கொண்டாடப்படுகிறது.
- 1924-ஆம் ஆண்டு இத்தாலி நாட்டில் உள்ள மிலன் நகரில் நடைபெற்ற சர்வதேச சேமிப்பு வங்கிகளின் சிக்கன மாநாட்டில் அக்டோபர் -31 ஆம் தேதி உலக சிக்கன நாளாக பிரகடனப்படுத்தப்பட்டது.
- அக்டோபர் 31 முன்னாள் பிரதமர் இந்திரா காந்தி இறந்த தினம் என்பதால், இந்தியாவில் சிக்கன தினம் அக்டோபர் 30-ஆம் தேதி அன்று கடைபிடிக்கப்படுகிறது.


SIVARAJAVEL IAS ACADEMY

## INS இன் புதிய தலைவராக ஷ்ரேயாம்ஸ் குமார் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டார்:

- மாத்ருபூமி நாளிதழைச் சேர்ந்த எம். வி.ஷ்ரேயாம்ஸ் குமார், நாட்டிலுள்ள செய்தித்தாள்கள், இதழ்கள் மற்றும் பருவ இதழ்களின் வெளியீட்டாளர்களின் உச்ச அமைப்பான இந்திய செய்தித்தாள் சங்கத்தின் (INS) தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.
- இந்திய செய்தித்தாள் சங்கம்:
- இந்த சங்கம் 1939 இல் நிறுவப்பட்டது.
- இதன் தலைமையகம் புது தில்லியில் உள்ள ரஃபி மார்க்கில் உள்ளது .

## ராணுவ மருத்துவப் பிரிவில் முதல் பெண் இயக்குநர் பொறுப்பேற்பு :



- இந்திய ராணுவ மருத்துவச் சேவைகளின் முதல் பெண் இயக்குநராக கடற்படை துணைத் தளபதியும் மருத்துவருமான ஆர்த்தி சரின் பொறுப்பேற்றுக்கொண்டதாக பாதுகாப்பு அமைச்சகம் தெரிவித்தது.
- ராணுவ மருத்துவச் சேவைகளின் 46ஆவது இயக்குநராக ஆர்த்தி சரின் பொறுப்பேற்றார்.

SIVARAJAVEL
IAS ACADEMY